# உலகத்தமிழ்

8

ஏப்ரல் மாத மின்னிதழ்

## உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




**மலர்: 3** **இதழ்: 8**

திருவள்ளுவராண்டு 2050/ விகாரி, பங்குனி



**ஆசிரியர் & வெளியிடுபவர்:**

**முனைவர் ப. அன்புச்செழியன்**

இயக்குநர் (பொ),

உலகத் தமிழ்ச் சங்கம்,

அரசு சட்டக் கல்லூரி அருகில்,

மருத்துவர் தங்கராஜ் சாலை,

மதுரை - 625020.

தமிழ்நாடு, இந்தியா.

தொலைபேசி: 0452- 2530799.

**மின்னஞ்சல்:**

utsmdu2@gmail.com

---

**Editor & Publisher**

**Dr. P. Anbucheliyan**

Director (i/c)

World Tamil Sangam,

Near, Govt Law College

Dr. Thangaraj Salai,

Madurai - 625020.

Tamilnadu, India.

Telphone: 0452- 2530799

E.Mail:

utsmdu2@gmail.com


## வரவேற்கப்படுகின்றன...!

தமிழ்நாடு அரசு நிறுவனமான உலகத் தமிழ்ச் சங்கம், உலகளாவிய தமிழ் அமைப்புகளுக்குத் தமிழ்ப் பணி தொடர்பான செய்திகளை எடுத்துச் செல்வதற்காக 'உலகத்தமிழ்' எனும் மின்னிதழினையும் தொடங்கியிருக்கிறது. உலக நாடுகளில் இயங்கி வரும் அனைத்துத் தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகள், நிறுவனங்கள், தமிழ் ஆராய்ச்சி மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவை பற்றிய விவரங்களைத் தொகுத்தல், உலகமெங்கும் இயங்கிவரும் இவ்வமைப்புகளை ஒரு குடையின்கீழ் பதிவு செய்து ஒருங்கிணைத்துக் கூட்டமைப்பு உருவாக்குதல் என்பது உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கமாகும். மேலும், தமிழறிஞர்கள், கலைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றைப் பரப்புதல், தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் அயல் நாடுகளுக்கு ஆய்வாளர்களை அனுப்பித் தமிழர் நிலையினை ஆய்தல், அந்நாட்டு ஆய்வாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்துக் கருத்துப் பரிமாறுதல், பிறநாட்டுத் தமிழர் களஞ்சியம் தயாரித்தல், தமிழ் மொழியிலுள்ள சங்க கால நூல்கள், இலக்கியங்கள் முதலியவற்றை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் அறிந்து தெளிய வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமல்லாமல் தமிழாராய்ச்சியை வளப்படுத்தும் நிலையில் உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கைகள் எடுத்தல், உலக நாடுகளில் தமிழர்கள் வாழும் இரு நாடுகளைத் தேர்வு செய்து ஒவ்வோர் ஆண்டும் ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்துதல், கலைநுட்பம் வாய்ந்த சிற்பங்கள், நாட்டுப்புறப்பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் கண்டு, பாராட்ட வாய்ப்பு ஏற்படுத்துதல் இன்றைய தேவையாகும். தமிழ்க் கலை, பண்பாடு காக்கும் பொருட்டு உலக நாடுகளின் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ் தொடர்பான ஓலைச்சுவடிகள், அரிய கையெழுத்துச்சுவடிகள், அரிய கலைப் பொருட்கள் முதலிய தரவுகளைத் திரட்டுதல் போன்ற பணிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த மின்னிதழினை மேம்படுத்திடத் தகுந்த ஆலோசனைகள், தமிழ் மற்றும் தமிழர் தொடர்புடைய செய்திகள், தமிழாய்வுக் கட்டுரைகள் போன்றவை வரவேற்கப்படுகின்றன.

முனைவர் ப. அன்புச்செழியன்
ஆசிரியர்(பொ.), உலகத்தமிழ் மின்னிதழ்

## மலரின் உள்ளே......


| வ. எண் | தலைப்பு | ஆசிரியர்கள் | பக் |
|---|---|---|---|
| 1. | கலைஞராய் அறிஞராய் துறவியாய் மிளிர்ந்த அடிகளார் | மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, ஆசுதிரேலியா | 03 |
| 2. | தமிழுக்குத் தாலாட்டுத் தொட்டில் கண்ட ஜொகூர் | ந.வேணுகோபால் மலேசியா | 09 |
| 3. | இனிக்கும் இலக்கியம் | முனைவர் முரளிதரன் கிருஷ்ணன், கொரியா | 14 |
| 4. | ஓவச்செய்தி என்றோர் இலக்கிய இன்பப்பரிசு | முனைவர் வே.விக்னேசு கோயம்புத்தூர் | 16 |
| 5. | குறிஞ்சிநில இனக்குழு வாழ்க்கை முறை | க.கருப்பசாமி மதுரை | 22 |
| 6. | ஜொகூர் தமிழ் இலக்கியக் கழகம் | சுரவி மலேசியா | 28 |
| 7. | மானுடவியல் நோக்கில் நீராடல் குறித்த பண்பாட்டு பொருண்மை (சங்க இலக்கியத்தை முன் வைத்து) | முனைவர் து.ராஜம்மாள் கோவை | 29 |
| 8. | ஆற்றுப்படை நூல்கள் காட்டும் தமிழரின் விருந்தோம்பல் | மு.கயல்விழி காஞ்சிபுரம் | 41 |
| 9. | புலனத்தில் தமிழ் இலக்கணப் பிழைகள் | இரவிசந்திரன் சுப்பிரமணியம், மலேசியா | 49 |
| 10 | கனவில் கண்ட முகம் | முனைவர் முரளிதரன் கிருஷ்ணன், கொரியா | 54 |

**கலைஞராய் அறிஞராய் துறவியாய் மிளிர்ந்த அடிகளார்**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**

**முன்னாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**

**மெல்பேண். அவுஸ்திரேலியா**

உலகல் பிறக்கின்ற மனிதரெலாம் உயர்வு நிலையினை அடைந்து விடுவதுமில்லை. இலட்சியம் பற்றிச் சிந்திக்கும் நிலை பலரிடம் காணப்படுவதும் இல்லை. பிறந்தோம் வாழுகிறோம் என்னும் பாங்கில் இருப்பவர்கள்தான் பல பேர்களாக இருக்கிறார்கள். வாழும் காலத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள இயலாமல் பிரச்சினைகள் வழியில் சென்று அதனுடன் ஒத்துப்போய் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அதேவேளை நமக்கு ஏன் இந்தப் போராட்டம். வருகின்ற பிரச்சினைகளை புறந்தள்ளி விட்டு தானாக ஒதுங்கி நமக்கேன் இந்தச் சிக்கல்? என ஒதுங்குவதுதான் மேலென எண்ணி இருப்பவர்களும் இருக்கிறார்கள். என்னதான் பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு அவற்றுக்கு உரிய தீர்வினைக் காணும் முயற்சியில் ஈடுபட்டு முற்போக்காளர்களாக சமூகச் சிந்தனையாளர்களாக இருப்பவர்களும் இருக்கிறார்கள்.

மூன்றுவகையான சிந்தனை செயற்பாடு மிக்கவர்களை சமூகத்தில் காணலாம். வேளை இவர்களில் எந்த வகையினரை சமூகம் நினைத்து பார்க்கும் என எண்ணுகின்ற பொழுதுதான் மனிதவாழ்வின் அர்த்தம் தெரியவரும். பிரச்சினைகளுடன் ஒத்துப்போய் கையாலாகாத நிலையில் இருப்போரையோ அல்லது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் நமக்கேன் என்று புறந்தள்ளி ஒதுங்கிப் போகின்றவர்களையோ யாரும் எக்காலத்தும் நினைத்துப் பார்க்கவே மாட்டார்கள். சமூகத்தின் பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கு உகந்த தீர்வுகளைக் கண்டறிந்து அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமூக உணர்வினை உள்ளத்துள் இருத்திக் கொண்டு வாழ்ந்தவர்கள்தான் எல்லோராலும் எக்காலத்தும் நினைவு கூரும் நிலைக்கு நிற்பார்கள் என்பது மிகவும் முக்கிய கருத்தெனலாம். இந்த வகையில் பார்க்கும்வேளை ஈழத்தின் கிழக்கில் காரைதீவில் தோன்றிய சுவாமி விபுலானந்த அடிகளார் வந்து நிற்கிறார் எனலாம்.

விபுலானந்த அடிகளார் அவர்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் ஐம்பத்து ஐந்து வருடங்கள் மட்டுமேயாகும். ஆனால் இக்கால கட்டத்துக்குள் அவரின் வாழ்வானது மூன்றுவித அனுபவங்களைக் கொண்டதாக அமைகிறது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். ஈழத்தில்

பிறந்த அடிகளார் இந்தியாவில் இருக்கும் நிலை ஏற்படுகிறது. அதுவும் தமிழ் நாடாகிய தென்னிந்தியாவிலும் தமிழ் பேசாத வட இந்தியாவிலும் இருக்கின்ற சூழலும் அடிகளாருக்கு ஏற்படுகிறது. இதனால் மூன்று விதமான சூழலும் அங்கு கிடைத்த அனுபவங்களும் அடிகளாரின் பணிகளில் சிந்தனைகளில் செயல்பாடுகளிலெல்லாம் பல தாக்கங்களுக்குக் கனமாகவும் இருந்திருக்கும் என்பதும் கருத்திருத்தில் வேண்டியதே.

பிரித்தானியர் ஆட்சியில் இந்தியா சிக்கித்தவித்த காலம். வட இந்தியாவில் ஒரு போக்கும் தமிழ்நாட்டில் இன்னொரு போக்கும் சமூகத்தில் எழுந்து நின்ற காலம். சாதிப்பிரிவினை வடக்கில் காந்திய இயக்கத்தால் எதிர்க்கப்பட்டது. தீண்டாமை என்பது இருந்தால் தேசிய உணர்வு ஏற்படுதல் தடையாகும் என்பதால் காந்தி அவர்கள் தீண்டாமைக்கு எதிர்க்குரல் கொடுத்தார். தமிழ்நாட்டில் பிராமணர் ஆதிக்கம் யாவற்றிலும் முன்னின்றதால் அதனை உடைக்க திராவிட இயக்கம் தலைதூக்கி தமிழியக்கத்தை முதன்மைப்படுத்தி தனித்தமிழ் வாதத்தை ஓங்கி ஒலித்த சூழல் அங்கு காணப்பட்டது. இலங்கையிலோ சமயமாற்றம், இனவாதம், சாதிப்பிரச்சினை என்பவற்றோடு தமிழ்ப்பகுதிகளில் மரபுவழி தமிழ் இலக்கியங்கியங்களைப் பேணுவதும், சைவத்தைக் காப்பதுவுமான ஒரு சூழல் காணப்பட்டது எனலாம்.

இப்படியான சூழலில் சுவாமி அவர்கள் வாழும் நிலை ஏற்பட்டதால் அவரின் நடவடிக்கைகளிலும் இம்மூன்று சூழல்களும் பாதிப்பினை உண்டாக்கத் தவறவில்லை என்றே அறிஞர்கள் கருதுகிறார்கள். தாய்மொழியுடன் ஆங்கிலம், சமசுகிருதம், சிங்களம், பாளி, லத்தீன், கிரேக்கம், அரபி என்று பன்மொழி அறிவினையும் சுவாமி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். பன்மொழி அறிவால் அவரின் பார்வை குறுகிய வட்டத்துக்குள் அடங்கிவிடவில்லை. அவரின் எண்ண ஓட்டங்கள் பரந்துபட்டனவாகவே அமைந்திருந்தது.

மரபுவழியில் தமிழினைக் கற்று தமிழில் பண்டிதர் பட்டமும் பெற்றவராக இருந்த பொழுதும் அவரின் விஞ்ஞானப் பட்டப்படிப்பு அவரை பழமைக்குள் மட்டும் அமுங்கிவிடச் செய்துவிடவில்லை என்பது மிகவும் முக்கியக் கருத்தெனலாம். பண்பாட்டினைக் கட்டிக்காத்து சமயநெறிகளைக் கடைப்பிடித்து ஒழுக்கத்தை உள்ளிருத்தி வாழ்ந்தாலும் அவரின் சிந்தனைகள் செயற்பாடுகள் சமூகத்தின் புரையோடிப்போன புறம்போக்கான நடவடிக்கைகளை மட்டும் ஏற்றிவிடும் மனப்பாங்கு அவரிடம் காணப்படவில்லை என்பதும் மனம் இருத்தவேண்டியதே.

சைவசமயச் சூழலில் சைவராக வாழ்ந்த சுவாமிகள் ஆரம்பத்தில் சித்தாந்தத்தை பெரிதென எண்ணுகிறார். பின்னர் அவரின் போக்கு இராமகிருஷ்ண மடத்துடன் இணைந்துவிடும் நிலையில் வேதாந்தமே முன்னுரிமை வகிக்கும் நிலை

உருவாகிறது. இராமகிருஷ்ண அமைப்பில் சேருமுன் சுவாமிகளின் சிந்தனை, எழுத்து, செயற்பாடுகள் வேறு. இராமகிருஷ்ண அமைப்பில் இணைந்தபின்னர் அவரின் எழுத்துக்கள், நடவடிக்கைகள், சமூகப் பார்வைகள் வேறாகவே இருந்தன என்பதை அவரின் வரலாற்றில் கண்டுக்கொள்ள முடிகிறது. சமரச சன்மார்க்க நெறி என்பதே அவரின் மனத்தை நிறைத்து நின்றது எனலாம்.

மொழிபெயர்புகள் செய்தார். மரபுக்கவிதைகள் யாத்தார். பலவிதமான கட்டுரைகளை எழுதினார். பத்திரிகை ஆசிரியராக விளங்கினார். ஆராய்ச்சி நூல்களை எழுதினார். இசை பற்றி ஆராய்ந்தார். அவரின் அரிய முயற்சியால் பழந்தமிழ் இசையின் பரிணாமம் என "யாழ் நூல்" எழுந்து வந்தது. இந்த நூலின் வருகை பலரையும் பிரமிக்க வைத்தது. பழங்கால இசை மரபை தனது இசை அறிவாலும், கணித அறிவாலும், தமிழ் அறிவாலுமே யாழ்நூலாக அடிகளார் அவர்கள் ஆக்கி அளித்தார் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

அறிஞர்கள் யாவரும் போற்றும் வண்ணம் இப்படைப்பு வந்திருக்கிறது என்றால் அந்த அளவு ஆளுமையினை அடிகளாரின் கல்விப்புலமே வழங்கி இருக்கிறது எனலாம். யாழ்நூலினை ஆராய்கின்ற பொழுது தமிழிசையினை கணிதமொழியினில் விளக்க முயன்ற திறனையே காட்டுகிறது எனலாம்.

பன்மொழி அறிவால் பன்னாட்டு நூல்களையும் அங்குள்ள பண்பாடு, கலாச்சாரங்களையும் மூல மொழியிலே கற்று விளங்கும் ஆற்றலை அடிகளார் பெற்றவர் ஆகிறார். மரபுவழிவந்த தமிழ் அறிஞர்களிடம் கல்வி கற்றாலும்கூட அடிகளாரின் எண்ணங்கள் விசாலம் அடைவதற்கு பன்மொழி ஆற்றல் கைகொடுத்த காரணத்தால் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதை அடிகளார் புறந்தள்ளுகிறார். அக்கால தமிழ் அறிஞர்களிடம் காணப்பட்ட அத்தனை அறிவும் ஆற்றலும் அடிகளாரிடமும் காணப்பட்ட போதிலும் - அவர் அத்தகைய அறிஞர்கள் வரிசையில் தாமும் இடம்பெற்று நின்று விட விரும்பவில்லை. அவரின் கலை, இலக்கியம், சமூகம் பற்றிய பார்வையானது உலகின் பரந்துபட்ட சிந்தனைகளுடன் தமிழினையும் உற்று நோக்குவதாகவே அமைந்திருந்தது என்பதுதான் கவனத்தில் இருத்த வேண்டிய கருத்தெனலாம்.

அகில உலகப்பார்வையினால் அடிகளின் சமூக நோக்கும் அதன் அடிப்படையிலே எழுச்சி பெற்றது எனலாம். உயர்வு தாழ்வு பார்ப்பதை அவரது உள்ளம் ஏற்றிட மறுத்தது. இதனால் சாதிபற்றிய எண்ணமே அவரின் மனத்தில் இருந்திட மறுத்தேவிட்டது எனலாம். செயல்களினால் மனிதர்கள் வேறுபடலாமே ஒழிய பிறப்பினால் அல்ல என்னும் சிந்தனை அடிகளாரின் மனதில் வேரூன்றி நின்றது என்பதை அவரின் நடவடிக்கைகள் மூலம் அறிந்திட முடிகிறது என்று அவரின் வரலாறு புலப்படுத்தி நிற்கிறது எனலாம்.

விஞ்ஞானம் படித்தவர் மெய்ஞானி ஆகிறார். இராமகிருஷ்ண அமைப்பு அடிகளிடம் பல மாற்றங்களுக்கு வழி சமைக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த பொழுது ஒதுக்கப்பட்டவர்கள், கல்விகற்க வழியற்றவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து அவர்களின் நலனில் அடிகளார் காட்டிய அக்கறை அவரின் சமூக சமத்துவ மனப்பாங்கினுக்கு மிக்கதோர் சான்று எனலாம்.

பாரதியாரை பெரும்புலவர் என்றோ அவரின் கவிதைகளை தமிழ்க் கவிதைகள் என்றோ தமிழ்நாட்டில் இருந்த பழந்தமிழ் பண்டிதப் பரம்பரை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தமிழ்நாட்டில் பிறந்த பாரதியை சமூகத்தின் முன்னே கொண்டுவந்து காட்டி பாரதிக்கும் சுவாமி விபுலானந்தர் ஈழத்தவராக இருந்தும் தனது படைப்பினுக்கு முன்னுரிமை எடுத்துக் கொடுத்திருக்கிறார் என்றால் சுவாமிகளின் எதிர்கால நோக்கும் தீர்க தரிசனமும் பரந்துபட்ட பார்வையும் என்றுதானே கொள்ள முடிகிறது. இதற்குக் காரணம் சுவாமிகளின் பழமைக்கும் புதுமைக்குமான பொருத்தப்பாடு எனலாம். புதுக்கவிதை எழுதுபவர்கள் பாரதியைத் தொடுகிறார்கள். வசன கவிதையைக் கையில் எடுப்பவர்கள் பாரதியைப் பார்க்கிறார்கள். மரபுக்கவிஞர்கள்கூட பாரதியின் கற்பனை ஆற்றலில் கட்டுண்டு போகிறார்கள். இந்த வகையில் பாரதிக்கு முன் பாரதிக்கிக்குப்பின் என்று சொல்லும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. பாரதியின் பாடல்கள் பாடசாலை தொடக்கம் முதல் பல்கலைக்கழகம் வரை படிக்கின்றனர். இப்படியெல்லாம் நடக்கவேண்டும் என்றும் அடிகளாரின் சிந்தனையில் அன்றே உதித்திருக்கிறது. இதைத்தான் ஆத்மீக பலம் என்கிறோம். ஆத்மீக பலம் மிக்க அடிகளார் எதைச் செய்தாலும் அவையாவுமே அன்றும் பயனை நல்கியது. இன்றும் நல்கிக்கொண்டே இருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா!.

“தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பது முற்றிலும் அடிகளாருக்கே மிகவும் பொருந்துவதாக அமைகிறது. ஈழத்தில் காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தவர் இமயமலைவரை சென்று இமாலய சாதனையின் நாயகனாக மிளிர்ந்தார் எனும் பொழுது கருவிலேயே திருவினைப் பெற்றே அடிகளார் பிறந்திருக்கிறார் என்பது வெள்ளிடைமலை எனலாம். சாதாரண விஞ்ஞான ஆசிரியராய் ஆரம்பித்து யாழ்ப்பாணம் சென்று அங்கு தனது வாழ்வினைத் திருப்பி விடுகிறார் அடிகளார். கல்வியால் திருப்பம், சிந்தனையால் திருப்பம், மயில்வாகன விஞ்ஞான ஆசிரியராக யாழ்ப்பாணம் சென்றவர் பாதை மெஞ்ஞான சிந்தனையில் சுவாமி விபுலானந்தர் ஆகிவிடுகிறார். பழமையில் ஊறியவர் பழமையையும் புதுமையையும் சரிவர உணர்ந்து சரியான வழியினைத் தேர்ந்தெடுத்து சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும் சிந்தியில் இருத்தி சமூக ஈடேற்றத்துக்கு எது சிறந்தது என்பதை உள்ளத்து இருத்தி அதன்வழியில் செயலாற்றி சமூகத்தில் ஏற்றுதலுக்கும்

போற்றுதலுக்கு உரியவராக உயர்ந்து நிற்கிறார்.

கல்வித்தொண்டு, சமூகத்தொண்டு, இலக்கியத்தொண்டு இவை யாவற்றையும் எடுத்து நோக்கும் பொழுது அவரின் பிறப்பு தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே கொள்ளலாம். பழமையில் வளர்ந்தாலும் புதுமையில் பயணித்தார். தனித்தமிழ் விரும்பினாலும் பன்மொழிப் புலமையினையும் ஒதுக்கிவிட விரும்பவில்லை. மரபிலே முகிழ்த்தாலும் விஞ்ஞானம் அவரை விரிவுபடுத்தியது. அதனால் குறுகிய பாதைகள் குறுக்கிடுவதை ஒதுக்கியேவிட்டார். சித்தாந்த நிலையிலிருந்து வேதாந்த நிலைக்கு வந்தமையால் அவரின் நோக்கும் செயலும் பரந்து பட்டதாகவே காணப்பட்டது. கலைஞராய் விளங்கினார், அறிஞராய் விளங்கினார், நிறைவில் துறவியாய் உயர்வு பெற்றார். தாமரை இலைத் தண்ணீராய் அடிகளார் வாழ்வு அமைந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. அவரின் உள்ளம் வெள்ளைக் கமலமாகவே இருந்தது என்பதை யாவருமே ஏற்றுக் கொள்ளுவார்கள்.

# மதுரையில் மார்ச் இறுதியில் உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு

## தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தகவல்

**மதுரை, பிப். 28:** மதுரையில் வரும் மார்ச் இறுதியில் உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு நடைபெற உள்ளது என்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் கூறினார்.

அயலகத் தமிழ்ப் படைப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பன்முக நோக்கில் 'அயலகத் தமிழ்ப் படைப்புகள்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. இரு நாள்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கின் நிறைவு நாள் நிகழ்ச்சி மற்றும் சிறந்த அயலகப் படைப்புகளுக்கு பரிசு வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் க.பாண்டியராஜன் கலந்துகொண்டு பேசியது:

ஒரு மொழி அழியாமல் இருக்க வேண்டுமெனில் புதிய புதிய சொற்கள் கண்டறியப்படுவது அவசியம். அதற்கான பணிகளை தமிழ் வளர்ச்சித் துறை செய்து வருகிறது. உலகளவில் தமிழில் உள்ள 147 அகராதிகளை ஆய்வு செய்ததில், தமிழில் 4 லட்சத்து 12 ஆயிரம் சொற்கள் தனித்துவம் மிக்கவையாக இருக்கின்றன. மேலும், சொற்குவை திட்டத்தின் மூலம், இதுவரை 1000 புதிய சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதற்காக ரூ.10 கோடி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, டெக்சாஸ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், மலேசியா, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையில் ஆண்டுதோறும் இளந்தமிழர் இலக்கியப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பை பெற்றிருக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக, அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ் மன்றங்கள் தொடங்குவதற்கான அறிவிப்பை தமிழக முதல்வர் விரைவில் வெளியிட உள்ளார்.

உலகளவில் இருக்கும் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து தமிழ் வளர்ச்சிக்கான பணிகளை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கில் உலக தமிழ்ச் சங்கங்களின் மாநாடு, மார்ச் இறுதியில் மதுரையில் நடைபெற உள்ளது. இதில் 25 நாடுகளில் இருந்தும் தமிழகம் மட்டுமின்றி 10 வெளி மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் பங்கேற்கின்றன என்றார்.

**பரிசுபெற்ற அயலகப் படைப்புகள்:** சிங்கப்பூர் கவிஞர் அ.இன்பா (மழைவாசம் - கவிதை நூல்), ஆஸ்திரேலிய எழுத்தாளர் ஆசி.கந்தராஜா (கள்ளக் கணக்கு - சிறுகதை), ஆஸ்திரேலிய எழுத்தாளர் மாத்தாளை சோமு (கண்டிச்சீமை -புதினம்), ஜெர்மனி தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் க.சுபாஷிணி (ஜெர்மன் தமிழியல்-ஆய்வு நூல்) ஆகியோருக்கு சிறந்த படைப்புகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறந்த பதிப்பகத்துக்கான பரிசை காலச்சுவடு பதிப்பகத்தின் க.இரா. மைதிலி சுந்தரம் பெற்றுக் கொண்டார்.

இதில், மதுரை மாவட்ட ஆட்சியர் டி.ஜி.வினய், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) ப.அன்புச்செழியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கின் நிறைவு விழாவில் சிறந்த அயலகத் தமிழ் படைப்பாளிகளுக்கான பரிசுகளை அ. இன்பா, மாத்தளை சோமு, நா. புருசோத்தமன், ஆசி. கந்தராஜா, க. இரா. மைதிலி சுந்தரம் (காலச்சுவடு பதிப்பகம்) ஆகியோருக்கு வழங்குகிறார் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க. பாண்டியராஜன். உடன் மாவட்ட ஆட்சியர் டி.ஜி. வினய், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) ப. அன்புச்செழியன்.

## தொல்பொருள்கள் பராமரிப்புக்கு விரைவில் தனி அலுவலர்

மதுரையில் செய்தியாளர்களிடம் அமைச்சர் க.பாண்டியராஜன் கூறியது:

கீழடி உள்ளிட்ட 4 இடங்களில் அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொல்பொருள்கள் கண்டறியப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் முதல் 2 ஆயிரம் வரை பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இதுவரை சேகரிக்கப்பட்ட தொல்பொருள்களில் 10 சதவீதம் தான் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மற்றவை பாதுகாப்பு அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் கிடைக்கும் தொல் பொருள்கள், புதையல்களாகக் கிடைக்கக் கூடிய அரிய பொருள்களைப் பராமரிப்பது அவற்றில் கூடுதல் ஆய்வுகளை மேற்கொள்வது போன்ற பணிகளுக்காக தனி அலுவலரை நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகம் உலகத் தரம் மிக்க அருங்காட்சியமாக உருவாக்கப்பட உள்ளது. அதேபோல, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் உள்ள அருங்காட்சியகங்களைத் தரம் உயர்த்த, உலகளவில் சிறந்த அருங்காட்சியகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய உள்ளோம் என்றார்.

தினமணி Sat, 29 February 2020
https://epaper.dinamani.com/c/49473350



# தமிழுக்குத் தாலாட்டுத் தொட்டில் கண்ட ஜொகூர்

ந.வேணுகோபால்
தலைவர், ஜொகூர் தமிழர் சங்கம், மலேசியா

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்ற மகாகவி பாரதியாரின் சித்தாந்தத்தை முன்னிலையாகக் கொண்டு, ஜொகூர் தமிழர் சங்கம் 1952 ஆம் ஆண்டு, தமிழர்கள் பால் பற்றுள்ளம் கொண்ட அன்பர்களால் துவக்கப்பட்டது.

கடல் கடந்து மலேசியத் திருநாட்டில் தமிழர்கள் வாழ்ந்தபோதும், தங்கள் வாழ்வில் இரண்டறக் கலந்த கலைபண்பாட்டுக் கூறுகளை மறவாமல் கடைபிடிக்கவும், தாய்மொழியைக் கண்ணாகக் கருதிப் படிக்கவும் போற்றவும் ஜொகூர் தமிழர் சங்கம் துணை நின்றது.

1952 முதல் 1975 வரை, ஜொகூர் தமிழர் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுத் திருமிகு. நடேசன் செட்டியார் சங்கத்தை வழிநடத்தினார். துணைத்தலைவராக டத்தோ ஏ.அப்துல் மஜித்தும் செயலாளராகத் திரு. தங்கவேலுவும் துணைச் செயலாளராகத் திரு.துரைசாமியும் பொருளாளராகச் சேனாதிராஜாவும் சேவையாற்றினர்.

திரு. நடேசன் செட்டியார் தலைமையில் சங்கம் தமிழர்களிடையே ஒற்றுமையையும் அவர்களிடையே நிலைத்திருந்த கலை, பண்பாட்டு கூறுகளையும் போற்றி வளர்த்தது. தலைவர் நடேசன் செட்டியார் தமிழ் பேசும் மக்களை இனம், சமயமற்ற வகையில் அனைவரும் சங்கத்தில் உறுப்பு பெற வகை செய்தார். தமிழர்கள் தங்கள் வாழ்வில் உயர்நிலை பெற உந்துதல் தரும் மந்திரமாகத் தமிழர் சங்கம் உருமாறியது. அவரோடு இணைந்து, திரு. ஆறுமுகம் மாண்டோர். திரு. அச்சுதன் மாண்டோர். திரு. வேலுத்தேவர். திரு. முத்துவேலு ஆகியோர் ஆற்றலுடன் செயல்பட்டனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் இக்குழுவில் தொய்வுநிலை தேய்பிறையாகத் தோன்றியது. அச்சமயம் திரு. பி.என். இராஜகோபால், எஸ். அந்தோணிசாமி ஆகியோர் ஆர்வத்துடன் சங்கத்தில் இணைந்தார்கள். தமிழர் சங்கத்தின் பொருளாதார நிலையை உயர்த்த, 1955ஆம் ஆண்டு, கெப்பிட்டல் திரையரங்கத்தின் நிர்வாகி ஜேம்ஸ் ஹோ என்பவருடன் கலந்து பேசி, "சிவகங்கைச் சீமை" என்ற திரைப்படத்தை, சிங்கப்பூர் ஷா பிரதர்ஸ் நிறுவனத்தாரிடம் மேனன் சகோதரர்களின் உதவியுடன் மூன்று காட்சிகளாக 150.00 வெள்ளி செலவில் திரையிட்டனர்.

இத்திரைப்படக் காட்சிக்கு ஜொகூர் மாநிலத்தில், தோட்டம் தோட்டமாகச் சென்று டிக்கெளட் விற்று, சங்கத்திற்கு 15.000.00 வெள்ளி நிதி திரட்டினார்கள். அக்காலக் கட்டத்தில் இது பெரும் சாதனையாகக் கருதப்பட்டது. இது சங்கத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் புத்துயிர் கொடுத்தது.

அதன்பின், திரு. நடேசன் செட்டியார் தலைமையில் புதிய செயலாளராகத் திரு.இராஜகோபாலும் பொருளாளராகத் திரு. எஸ்.அந்தோணிசாமியும் துடிப்புடன் செயல்பட்டனர். ஆண்டுதோறும், தாங்கள் ஆற்றும் பல திட்டங்களில் தமிழர் திருநாளுக்கு முதலிடமும் முக்கியத்துவமும் தந்தனர். சிங்கப்பூரில் தமிழ்ச்சேவை ஆற்றி வந்த ஐயா கோ.சாரங்கபாணியோடு சேர்ந்து, தமிழர்கள் நெஞ்சம் மறவாப் பல பண்பாட்டு நிகழ்ச்சிகளைத் திரு. நடேசன் செட்டியார் ஜொகூர் பாருவில் நடத்தினார்.

1956 ஆம் ஆண்டிலிருந்து மூன்று நாள் நிகழ்ச்சியாகத் தமிழர் திருநாளைக் கொண்டாடினர். பல்வேறு தலைப்பில் போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதில் இயல், இசை, நாடகம் என மூன்றும் இருந்தன. ஜொகூர் மாநிலச் சுற்று வட்டாரங்களில் இருந்த தமிழர்கள் இந்த மூன்று நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். சிறப்புப் பேச்சாளர்களின் சொற்பொழிவோடு விழா நிறைவு பெறும். மனோகரன், திருக்குறள் முனுசாமி, மா.பொ.சிவஞானம் போன்ற அறிஞர்கள் வந்து சொற்பொழிவு ஆற்றினார்கள். தமிழர்கள் தங்கள் மொழி வழி, தூயவாழ்வின் பண்பாட்டு கூறுகளைத் தொடர்ந்து பாதுகாக்கத் தூண்டுதல் தந்தனர்.

தமிழகத்தில் இருந்து சிறப்புப் பேச்சாளர்களைக் கொண்டு வந்தனர். அவர்களைக் கொண்டு ஜொகூர் மாநிலத்தில் பல நகர்களில் இலக்கியச் சொற்பொழிவுகள் இடம் பெறச் செய்தனர். சிங்கப்பூருக்கு வரும் தமிழகப் பேச்சாளர்களை, ஜொகூருக்கும் அழைத்து வந்து இலக்கிய உரையில் தமிழர்கள் நனைய மழைமேகமாக நின்றனர். ஜொகூர் மாநிலத்

தலைநகரமான ஜொகூர் பாருவில் நூல் நிலையம் அமைத்தனர். ஜாலான் ஜெர்டாக் மேராவில், திரு. பிரித்தாம் சிங் என்பவரிடமிருந்து ஒரு மாளிகை வீட்டை 150.00 வெள்ளிக்கு மாத வாடகைக்கு எடுத்தனர். இந்த வீட்டின் வரவேற்பறையை ஒரு படிப்பகமாக மாற்றினர். சிங்கப்பூரிலிருந்து 3000 நூல்களுக்கு மேல் வாங்கினர். நூலகத்திற்குத் திரு. வி.எஸ். மணியம் பொறுப்பாளராக இருந்தார். அதிக அளவில் பெண்கள் நூலகத்தைப் பயன்படுத்தினர். மூன்று புத்தகங்களை வீட்டிற்குக் கொண்டு சென்று படிக்க ஏதுவாக 50 காசு மாதச் சந்தா வசூலிக்கப்பட்டது. டெலிகம்ஸ், என்.ஈ.பி. போன்ற அரசாங்கத்துறை நிறுவனங்களில் பணியாற்றிய இந்திய ஊழியர்கள், வேலை உயர்வுக்கு ஆங்கிலம் படிக்க, முதியோர் கல்வித் திட்டம் தொடங்கினர். வாரத்தில் மூன்று நாட்கள் ஆங்கிலமும், இரண்டு நாட்கள் தமிழ்மொழியும் கற்றுத்தரப்பட்டது.

ஜொகூர் பாருவில் சுல்தான் இஸ்மாயில் நூல்நிலையம் துவக்கப்பட்டபோது, அங்கு தமிழ்ப்பகுதி அமையவும் தமிழர் சங்கம் 150.00 வெள்ளி நன்கொடை அளித்தது. இந்தத் தமிழ்ப் பகுதிக்குப் பொறுப்பாளராக, சங்கத்தின் பிரதிநிதியாகத் திரு. எல். வேலுமயில் இருந்தார். தமிழர் சங்கத்தினர் உறுப்பினர்களிடமிருந்து மாதச் சந்தா 50 காசு வசூல் செய்ய முழுநேர உதவியாளரை 50.00 வெள்ளி மாத ஊதியத்திற்கு நியமித்தனர். இவர் தோட்டம் தோட்டமாகச் சென்று, அச்சமயம் சங்க உறுப்பினர்களாக இருந்த 3000த்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களிடம் மாதச் சந்தா வசூலிப்பார்.

தமிழகத்திலிருந்து வரும் நாடகக் குழுக்களை ஒத்துழைப்புகொடுத்து, மாநிலத்தின் பல இடங்களில் முற்போக்கு, சீர்திருத்த நாடகங்கள் மேடையேற வழி கண்டனர். திரு. இராஜப்பா தலைமையில் தமிழர் சங்கம் இசைக்குழு ஒன்றையும் அமைத்தது. சங்க நிகழ்ச்சிகளில் மட்டும் அல்லாமல் 'மாநிலச் சுல்தான் பிறந்த நாள் விழாவிலும் அவர்களது இசைக்குழு இன்னிசை முழங்கியது.

வெளியூரிலிருந்து பல்வேறு அலவல் காரணமாக ஜொகூர் வரும் தமிழர்கள், தங்குவதற்கு இடமின்றி, சீனா கடைவீதி ஐந்தடியில் இரவைக் கழித்தனர்.இவர்களை விரட்டுவதற்குச் சீனக் கடைக்கார வியாபாரி சுடுநீரை இவர்கள் மேல் ஊற்றுவான். இதைக் கண்டு மனம் கொதித்து, துடித்த ஜொகூர் தமிழர் சங்கத்தினர், அவர்கள் இரவை இன்முகத்தோடு கழிக்க வாடகை வீட்டை ஏற்பாடு செய்தனர். தமிழர் சங்கம் முனியாண்டி தலைமையில் 20 பேர் கொண்ட தொண்டர் படையை அமைத்து இவர்கள் இரவில்

ஐந்தடியில் இருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனிப் பிரிவாகத் தடுப்பறை செய்து, வாடகை வீட்டில் தங்க வைத்தார்கள்.

ஒவ்வொரு தீபாவளிக்கும் சங்கத்தலைவரோடு சேர்ந்து செயலவையினர் நிலையம், பார்வையற்றோர் இல்லம் எனச் சென்று, தீபாவளி அன்பளிப்பு என வேட்டி, சட்டை, புடைவை எனப் புத்தாடைகளோடு உணவுப் பொருட்களும் வழங்கினார்கள். தீபாவளிக்குத் தலைக்குத் தேய்த்துக் குளிக்கச் சீயக்காய், எண்ணெய்கூடக் கொடுத்தனர். இந்த நிகழ்ச்சிக்குத் திரு.நடேசன் செட்டியார் ஒவ்வொரு ஆண்டும் 500 வெள்ளியைத் தவறாமல் கொடுத்து வந்தார். சங்கத்தின் செயலவை உறுப்பினர்களும் தங்களால் இயன்ற நிதியைக் கொடுத்தனர்.

சங்கச் செய்திகள் என அக்காலத்தில், ஒரு கையெழுத்துச் செய்தித்தாள் தயாரித்து உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டது. அதில் சங்கத்தினர்களைப் பாதிக்கும் பல பிரச்சனைகள் எழுதப்பட்டன. இதனால், இந்தியர்களிடையே நிலவிய பல்வேறு சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டது. ஜொகூர் பாகு ரெக்ஸ் திரையரங்கில் தமிழ்ச் சொற்கள் இடம்பெறாதது குறித்து அதன் நிர்வாகி திரு. பாலச்சந்தர் மேலவனிடம் சங்கம் பேச்சு வார்த்தை நடத்தியது. இருந்தும் அவர் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதை எதிர்த்துச் சங்கம் தீபாவளிக்கு முன் ஒரு மறியல் போராட்டத்தை நடத்தியது. இந்தப் போராட்டத்தில் 2000க்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். இதைக் கண்டு நிர்வாகம் அரங்கின் முகப்பில் தமிழ் எழுத்துகளைப் பொருத்தியது. திரைப்படம் தொடங்கப்படும்போது தமிழ் எழுத்துகளும் படவில்லையில் காண்பிக்கப்பட்டன. தன் சங்கம் நடத்திய போராட்டத்திற்குப் பெரு வெற்றி கிடைத்தது.

1978 முதல் 1979 வரை. திரு.நடேசன் செட்டியாரின் திருமகன் டாக்டர் ஞானபாசுகரன் அவர்கள் தந்தையின் அடிச்சுவட்டில் தமிழர் சங்கத்தை வழி நடத்தினார். அவர் தலைமையில் தமிழர் திருநாள் மாபெரும் பண்பாட்டு விழாவாக, 1978ஆம் ஆண்டு நடைபெற்றதை ஏராளமானவர்கள் பசுமையாகத் தங்கள் நினைவுப்பேழையில் சேர்த்து வைத்துள்ளார்கள். பின்பு, அவருக்கும் சங்கத்தில் இருந்த சிலருக்கும் அரசியல் ஆர்வம் அதிகரிக்கச் சமயப்பணியில் ஈடுபாடு பிரகாசிக்க, தமிழர் சங்கத்தின் செயல்பாடுகள் தளர்வடைந்தன. கால ஓட்டத்தில் தமிழர் சங்கத்தின் நிகழ்ச்சிகள் பின்னடைந்தன.

2004ஆம் ஆண்டில் தமிழர் சங்கம் திரு. நடேசன் செட்டியாரின் இளைய மகன் திரு.ந.வேணுகோபால் தலைமையில், தமிழர் சங்கம் தளர்ச்சியில் இருந்து மறுமலர்ச்சி

கண்டது. அவர் புதிய உறுப்பினர்களை முடுக்கிவிட்டார். அவரது நன்முனைப்பான சேவையில் தமிழர் சங்கம் முதல்நிலைச் சங்கமாகப் புத்துயிர் பெற்றது. திரு சிவராசா, திரு.கெங்கன் ஆகியோர் இவருடன் இணைந்து சேவையாற்றச் சங்கத்தில் திரு துரைசாமி, டாக்டர் பத்துமலை, திரு. சின்னப்பன், திரு.வடிவேலு, பத்திரிகை நிருபர் திரு. கலாராமு, எம்.ஜி.ஆர்.மதி முதலானோர் செயலவையில் இணைந்து செம்மாந்த பணி செய்தனர். இவர்களுடைய ஆற்றலால், திட்டமிடப்பட்ட செயல் திறனால், தமிழர் திருநாள் மீண்டும் பெருநாளாக, திருநாளாகத் தொடக்கமாகிக் கலை கட்டியது. இக்குழு சளைக்காமல் பல நல்ல பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. லியோனி பட்டிமன்றம், ரெ.சண்முகம் தலைமையில் பாட்டுமன்றம் / பட்டிமன்றம், தனித்து வாழும் தாய்மார்களுக்குத் தீபாவளி அன்பளிப்பு எனப் பல நிகழ்வுகளை நடத்தினர்.

2006 ஆம் ஆண்டு தமிழகப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். பேராசிரியர் அப்துல் காதர், டான்ஸ்ரீ பண்டிதன் இருவரையும் சிறப்புப் பேச்சாளர்களாகக் கொண்டு, தமிழர் திருநாள் நிகழ்ச்சியை மாபெரு விழாவாக நிறைவேற்றினோம். இவ்விழாவில் ஜோகூர் மாநிலத்தின் தமிழ்ச் சேவையாளர்கள் மதிப்புசெய்யப்பட்டனர். சிங்கப்பூர் வானொலிக் கலைஞர்கள், அழகிய பாண்டியன் ஆகியோருடன் இணைந்து நடத்திய இலக்கிய விழா, தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் கவிஞர் கண்ணதாசனுக்கு எடுத்த விழா, இதில் தமிழகத்திலிருந்து வழக்கறிஞர் இராமலிங்கம் அவர்களின் சிறப்புரை இதற்கு மேலும் அணி சேர்த்தது. மலேசியா நாட்டின் சொற்கொண்டல் சி. பாண்டிதுரை, பார்வையற்ற இசைக்கலைஞர் இராமன் இருவரும் இணைந்து நடத்திய அரிய கலைநிகழ்ச்சி, இப்படியாக ஜோகூர் மாநிலத் தமிழர்களுக்காகப் பல நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காக நடத்தப்பட்டன.

ஜோகூர் தமிழர் சங்கம் பல எதிர்காலத் திட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் முதலாவதாக, சொந்தக் கட்டடத்தைப் பெறும் திட்டம், ஜோகூர் வாழ் தமிழர்கள் கலை, இலக்கியப் பண்பாடு தொடர்பான பல நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடந்தி வருவதையே சங்கத்தின் முழுமுதற் கடமையாகக் கொண்டுள்ளது. இளைஞர்களுக்குத் தமிழ்மொழிமீது ஆர்வத்தைத் தூண்டுதல், தமிழ்ப் பண்பாட்டின்பால் கவனத்தைத் திருப்புதல். இதன் வழி மலேசிய நாட்டு இந்தியர்களைத் தமிழ் மொழியால் இணைப்பது போன்ற சிந்தனைகளைக் கருத்தில் கொண்டு இயங்கி வருகிறது ஜோகூர் தமிழர் சங்கம்.

# ‘தமிழர் திருமணங்களில் திருக்குறள், திருவாசகம் வாசிப்பை கட்டாயமாக்க வேண்டும்’

**மதுரை,பிப்.20:** தமிழர் திருமணங்களில் திருக்குறள், திருவாசகம் வாசிப்பை கட்டாயமாக்க வேண்டும் என்று காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் மு.கிருஷ்ணன் தெரிவித்தார்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் அமெரிக்காவின் தமிழ் அநிதம் ஆகியவற்றின் சார்பில் தமிழ்த் தரவகத் தொழில்நுட்ப பன்னாட்டுப் பயிலரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது. பயிலரங்கை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் மு.கிருஷ்ணன் தொடங்கி வைத்துப்பேசியது: நமது பண்பாட்டு வரலாறுகளை பதிவு செய்ய வேண்டும். நம் குடும்ப வரலாறு, நமது சொந்த ஊரின் வரலாறு, சுற்றத்தாரின் வரலாறு ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். அமெரிக்காவுக்குச் சென்றால் ஒவ்வொரு குடும்பத்திலும் பத்துத் தலைமுறைகளை தெரிந்து வைத்துள்ளனர்.




மதுரை உலகத்தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'அழகே தமிழே முருகா' என்ற நூலை காமராஜர் பல்கலைக்கழக துணைவேந்தர் மு.கிருஷ்ணன் வெளியிட அதை பெற்றுக்கொள்ளும் உலகத்தமிழ்ச்சங்க இயக்குநர் ப.அன்புச்செழியன் மற்றும் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் ஆய்வறிஞர் க.பசும்பொன் உள்ளிட்டோர்.

தமிழர்களின் தொன்மையான மரபுக்கலைகள், விளையாட்டுகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை பதிவு செய்யவில்லை. பல்லாங்குழியாடல், ஏர்உழுதல், திண்ணை அமைத்தல் உள்ளிட்ட பாரம்பரிய முறைகள் கூட பதிவு செய்யப்படவில்லை. ஓலைச்சுவடிகளின் பெருமைகளை அறியாமல் பூஜையறையில் வைத்து வணங்குகின்றனர். ஓலைச்சுவடிகளில் என்ன தகவல் பொதிந்துள்ளது என்பதை வெளியிடுவதில்லை. இனிமேலாவது இந்த வழக்கங்கள் மாறவேண்டும். தமிழர் திருமணங்களில் திருக்குறளையும், திருவாசகத்தையும் வாசிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்றார்.

கருத்தரங்கில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் ப.அன்புச்செழியன், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஆய்வறிஞர் க.பசும்பொன் ஆகியோர் கருத்தரங்க விளக்கவுரையாற்றினர். நிகழ்ச்சியில் பேராசிரியர் வி.ரேணுகாதேவி 'தமிழே முருகா' நூலுக்கான அறிமுகவுரையாற்றினார். தமிழ் அநிதம் நிறுவனத்தின் செயலர் அ.காமாட்சி வாழ்த்துரை வழங்கினார். தமிழ் அநிதம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் சுகந்தி நாடார் ஏற்புரையாற்றினார்.

இதைத்தொடர்ந்து நடைபெற்ற தொழில்நுட்ப பயிலரங்கில், செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின் பேராசிரியர் அகிலன் ராஜரெத்தினம் 'தரவகமும் தொழில்நுட்பமும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். பேராசிரியர் அ.காமாட்சி 'தொழில்நுட்ப முறையில் தமிழ்த்தரவகம்' எனும் தலைப்பில் பயிற்சியளித்தார். பயிலரங்கில், அருப்புக்கோட்டை சைவபானு சத்திரிய கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி பேராசிரியர், மாணவர்கள், தமிழறிஞர்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.


இனிக்கும் இலக்கியம்....

களவியல் கற்பியல் இரண்டும், தமிழர்
கண்ணாய் போற்றிய வாழ்வியல் நெறிகள்
உள்ளத்தை அள்ளும் உன்னத இலக்கியம்
ஓங்கிடும் அகத்திணை பாக்கள் யாவும்
வளமுறு தமிழின் வளத்தை உணர்த்தும்
வண்டமிழ் நற்றிணை திருக்குறள் மற்றும்
அழகொளிர் குறுந்தொகை தொல்காப்பியம்
அணிகலனாம் தமிழ் அன்னையின் முடியில்!

கனித்தமிழ் சொல்லும் கருத்து ஒன்று
களவும் கற்று மறவென் பதாகும்
நனியுடன் ஆய்ந்து பார்த்தால் இதனின்
நுட்பம் அறிந்து தெளிவு பெறலாம்!
மனங்கவர் பெண்ணை களவியல் செய்து
மணந்த பின்னர் மறுமுறை காதல்
மனத்துள் வராமல் வாழும் நெறியை
மாண்பாய் கூறும் பழமொழி ஆகும்!

வண்டமிழ் இலக்கிய நூல்களைப் படித்து
வாழ்வின் இலக்கை அடைந்திடல் சிறப்பு
மண்ணிலே வாழும் காலம் சிலவே
மாக்கள் வேண்டாம் வாழ்க்கைக் கலையில்
எண்ணத் தூய்மை எல்லாம் நல்கும்
ஏற்றமே வாய்க்கும் இலக்கியம் பயின்றால்
திண்ணமாய் நம்புவோர் தமிழால் உயர்வர்
தேனாய் இனிக்கும் தமிழால் வாழ்க்கை!

முனைவர் முரளிதரன் கிருஷ்ணன்
சுவொன், கொரியா



# ஓவச்செய்தி என்றோர் இலக்கிய இன்பப்பரிசு

முனைவர் வே.விக்னேசு
தமிழ் உதவிப்பேராசிரியர்,
பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 14.

## தோற்றுவாய்

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிக்கு மு. வரதராசனார் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் பல. இலக்கியம், புதினம், நாடகம், கடித இலக்கியம், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, மொழியியல் என்று இன்னோரன்ன துறைகளில் சாதனை புரிந்தவரவர். இத்தகு சான்றோர் படைத்த இலக்கிய ஆராய்ச்சி நூல்களுள் அகநானூற்றின் ஐந்தாம் பாடலின் விளக்கமாக அமைந்த 'ஓவச்செய்தி' என்னும் ஆராய்ச்சிப் பெரு நூலின்கண் புலனாகும் அன்னாரின் ஆராய்ச்சி வன்மையைச் சாற்றுவதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

## இலக்கிய ஆராய்ச்சி நூல்கள்

அ.சி. செட்டியார், வெள்ளைவாரணனார், தெ.பொ.மீ., ஔவை துரைசாமிப்பிள்ளை போன்ற புலமிக்க சான்றோர்கள் மரபிலக்கியக் களத்தில் வலம்வந்த காலத்தில் பண்டைத் தமிழகத்திற்கும் புத்திலக்கியத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவர் பெருந்தகை மு.வ. அவர்கள். சங்க இலக்கியத்தில் தோய்ந்த நெஞ்சங் கொண்ட அவர், சங்க இலக்கியத்தை எளிமைப் படுத்தினால் மட்டுமே அவை பொது மக்களிடம் சென்று சேரும்; பல்லாண்டுகள் இம்மன்பதையில் நின்று நிலவும்; சங்க இலக்கியம் என்றால் என்ன என்று அறியாதவரும் இல்லாத நிலை ஏற்பட்டு, ’சங்க இலக்கியம் எங்கள் இலக்கியம்’ என்னும் நிலை உருவாகும் என்பதை மனதிற்கொண்டு மு.வ. அவர்கள் சங்க இலக்கியங்களை இயன்றுழியெல்லாம் எளிமைப்படுத்தி, அவற்றைத் தொடர்கதை வடிவிலும் சிறுகதை வடிவிலும் படைத்துள்ளார்.

அவையே, மணல்வீடு (1948), திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (1948), மாதவி (1950), ஓவச்செய்தி (1950), கண்ணகி (1950), முல்லைத்திணை (1952), நெடுந்தொகை விருந்து (1952),

குறுந்தொகை விருந்து (1953), நற்றிணை விருந்து (1953), சங்க இலக்கியத்தில் இயற்கை (1954), நற்றிணைச்செல்வம் (1954), குறுந்தொகைச்செல்வம் (1955), நெடுந்தொகை செல்வம் (1955), நடைவண்டி (1955), கொங்குதேர் வாழ்க்கை (1955), புலவர் கண்ணீர் (1957), தமிழ்நெஞ்சம் (1957), இளங்கோ அடிகள் (1959), இலக்கியக் காட்சிகள் (1961), குறள் காட்டும் காதலர்கள் (1968) என்னும் பெயரிய நூல்களாம்.

இவற்றுள் விருந்து வரிசை நூல்களும் செல்வம் வரிசை நூல்களும் சங்க இலக்கியங்களான செவ்வியல் நூல்களை; நம் முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற இலக்கியக் கருவூலத்தை நயம்பட; எளிமையாக; சுவை மிளிர உரைக்கும் சொல்லோவியங்களாகும்.

### ஓவச்செய்தி

மு.வ.வின் நெஞ்சம் தூய தமிழ்நெஞ்சம்; சங்க இலக்கியங்களுள் ஆழ்ந்து தோய்ந்த இயற்கையோடு இயைந்த இலக்கியநெஞ்சம். எனவேதான், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் ஆய்வுப் புலத்தைத் தம் பட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இத்தகு பேரறிஞர் படைத்த இலக்கிய ஆராய்ச்சி நூல்களுள் குறிக்கத்தகுந்தது 'ஓவச்செய்தி' என்னும் நூல்.

மு.வ. அவர்கள் தாம் பிறந்த ஊரான 'வேலம்' என்னும் சிற்றூரைக் குறித்து 'எங்கள் ஊர் வேலம்' என்னும் தலைப்பில் படைத்த கட்டுரை 03.08.1969 இல் ஆனந்த விகடனில் வெளிவந்தது. இயற்கையில் தம்மைக் கரைத்துக் கொண்ட அவரின் இலக்கிய நெஞ்சம் புலனாக; இலக்கிய மணம் இனிது கமழ இக்கட்டுரை திகழ்வதைக் காணலாம்.

வேலத்து மலையின் இயற்கைச் சூழலில் தன் நெஞ்சைப்பறிகொடுத்த மு.வ இயற்கையையும் இலக்கியத்தையும் இணைத்து நோக்கினார். அச்சூழலில் தோன்றியதே 'ஓவச்செய்தி' என்னும் ஆராய்ச்சி நூலாம்.

### நூலெழுந்த சூழல்

நவில்தோறும் நயம் பயக்கும் அகநானூற்றுப் பாடல்களுள் 'அளிநிலை பெறாஅது' எனத்தொடங்கும் ஐந்தாம் பாடலை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மு.வ., 28 அடிகளில் அமைந்த அப்பாடலுக்கு 184 பக்கங்களில் எளிய நடையில்; பல்லார்க்கும் பயன்படும் வகையில் விளக்கங்களை வழங்கியுள்ளார். "முன்னங் காட்டி முகத்தின் உரையா ஓவச்

செய்தியின் ஒன்று நினைந்து" என்னும் அடிகளுள் அமைந்துள்ள 'ஓவச்செய்தி' என்னுந் தொடரையே இந்நூற் பெயராக்கியுள்ளார்.

“ஒரு பாட்டு; அதைக் குறித்துப் பல நாள் போராட்டம்; இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றாம் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும் போது எதிர்பாராத விளக்கம்; உள்ளத்தின் தெளிவால் திறந்த பேருவகை. இவையே இந்நூலாக உருப்பெற்றன" (ஓவச்செய்தி நன்றியுரை) எனும் இந்நூலெழுந்த சூழலை நமக்கறிவிக்கின்றார் மு.வ அன்றியும், இயற்கையையும் இலக்கியத்தையும் இணைத்து நோக்கிய அவர்தம் இலக்கிய நெஞ்சமும் இப்பகுதியான் புலனாகின்றதாம்.

## நூலமைப்பு

'ஓவச்செய்தி' எனுந் தலைப்பு அணியப்பெற்ற இந்நூல்,

1. பாட்டும் பொருளும்
2. இலக்கியமும் வாழ்க்கையும்
3. புது விளக்கம்
4. ஓவச்செய்தி

என்னும் நான்கு பகுதிகளை உடையதாம்.

வண்மையின் காரணமாக வறுமையுற்ற குடும்பத்தலைவன் வடபுலம் சென்று பொருள்தேடிக் கொணரத்துணிந்து பயணத்தைக் குறிப்பாக மனைவிக்குத் தெரிவித்த அவன், பயணத்திற்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துவிட்டு, மனைவியிடம் விடை பெறுதற்கு மனைவியை அழைக்க, அவளோ வாய் திறந்து பேசாமல் ஓவியம் போல் ஒரு செய்தியைக் குறிப்பாக உணர்த்த, மனைவியையும் கைக்குழந்தையையும் விட்டுப் பிரிய முடியாமல் கலங்கிய அவன், பிரிந்து செல்லும் முயற்சியைக் கைவிட்டான் இதுவே அப்பாடலுணர்த்தும் கருத்து.

## பாட்டும் பொருளும்

'பாட்டும் பொருளும்' என்னும் முதலியற்கண், மேற்குறித்த இப்பாட்டு, நாளுக்கு நாள் அவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கலைச்செல்வமாக விளங்கி வந்ததையும் அதனை ஆராயும் ஆராய்ச்சியில் அவர் மனம் ஈடுபட்டமையையும் உணர்த்தும் மு.வ. அப்பாட்டிற்கு அமைந்த பழைய குறிப்புரையின் நயத்தினை விளக்கி, அகநானூற்றிற்கு அவ்வுரையே முதல் மணிவிளக்கமாக இருந்து உதவியது என்றுரைத்து, இப்பாடலைப் பாடிய புலவர், பாலை பாடிய பெருங்கடுங்கோ

இப்பாடலைப் பாடிய வரலாறு, இப்பாட்டிற்கு அமைந்த குறிப்புரையின்படி அமைந்த பொருள்மயக்கம் அதுகுறித்து எழுந்த வாதங்கள் என இவற்றைச் சுட்டுகின்றார்.

தலைவன் தன் பயணத்தை இறுதிவரையில் தலைவிக்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ அறிவித்தான் அல்லன். பயணத்திற்குப் புறப்படும்போதுதான் அவளிடம் சொல்லி விடைபெற அழைத்தான். ஆயின், தான் தெரிவிக்க வந்ததை அறிவிக்கும் முன்னரே அவள் உணர்ச்சிவயப்படுகின்றாள். அவள் முகக்குறிப்பைக் கண்ட தலைவன் "நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே, இவ்வாறு பயணத்தைத் தடுக்க நினைக்கிறாளோ" (கண்ணியது உணரா அளவை நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே அடி 6,7:குறிப்புரை) என எண்ணினான் என்று இப்பாட்டிற்கு அமைந்த குறிப்புரை நவிலும் இச்செய்தி பொருந்தாது என்றுணர்ந்த மு.வ. இதற்கு ஏழு வாதங்களை முன்வைத்து ஒன்று, பாட்டில் குறைகாண வேண்டும் அல்லது பாட்டிற்கு வேறு பொருள் காணவேண்டும் என்பதனான் இவ்வியலை நிறைவு செய்கின்றார்.

## இலக்கியமும் வாழ்க்கையும்

'இலக்கியமும் வாழ்க்கையும்' என்னும் இரண்டாம் இயலகத்து, பாட்டை உணரும் முறையை நன்கு தெளிவித்து, 'பாடிய புலவரின் உணர்வைப் படிப்பவரும் பெறுதலே பாட்டை உணர்தலாகும்' என்று அறிவிக்கின்றார் மு.வ. அன்றியும், 'கற்பனைச் சிறகு கொண்டு இந்த வாழ்வை விட்டு, பாட்டு எழுந்த காலத்தில் அந்நாட்டு மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்குப் பறந்து செல்ல வேண்டும், என்றுரைக்கின்றார். எனவே, பழங்கால வாழ்க்கை நிலையை ஆராய்ந்து உணர்ந்திடில் சங்கப் பாட்டுகள் உண்மைக் கற்பனை அமைந்தவை என்பது எளிதில் விளங்கும் என்பது இவ்வியலின் முடிவாக விளங்குகிறது.

## புது விளக்கம்

'புது விளக்கம்' என்னும் பெயரிய மூன்றாம் இயலில், பழங்கால வாழ்க்கையை உணர்ந்து இப்பாட்டு என்ன கூறுகிறது என்று காணத் தலைப்படும் மு.வ., அவன் நெஞ்சம், அவள் நெஞ்சம் என்றின்ன தலைப்புகளில் பாடலுக்கு புதிய விளக்கங்களைக் கூறி, 'ஒவ்வொரு நிலையிலும் தலைவி கருதியது இன்னது என்று உணராது திகைத்த தலைவன், அவளிடம் அமைதி கண்டு அவள் உள்ளத்தை உணராது திகைத்தான். அவளின் கண்ணீரைக் கண்டு கலங்கி,

அவளின் நெட்டுயிர்ப்பைக் கண்டு தன் பயணத்தைக் கைவிட்டான்' என்று முடிபுரைக்கின்றார். ஆதலின், தலைவனின் மனம் திடீரென மாறவில்லை மாறாகத் தலைவியின் ஒவ்வொரு குறிப்பும் தலைவனின் மனத்தைப் படிப்படியே மாற்றி வந்தது. அவளின் உள்ளத்தை உணராது திகைத்தான். அவள் உகுந்த கண்ணீர் அவன் திகைப்பை வழக்கமாக மாற்றியது. அன்றியும், அவளின் நெட்டுயிர்ப்பே அவனுடைய கலக்கத்தை மேலிடச் செய்து பயணத்தைக் கைவிடச் செய்தது என்பது மு.வ. அவர்கள் இப்பாடலிற்குக் காணும் பொருள் என அறியலாகின்றது.

## நினைந்த ஒன்று

'ஓவச்செய்தி' என்னும் இறுதியியலின்கண், இப்பாடலின் மணிமுடியாய் விளங்கும் 'முன்னம் காட்டி முகத்தின் உரையா ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து' என்னும் அடிகளை விளக்க முனைந்த மு.வ. அவர்கள் இவ்வடிகளுள், தலைவி ஓவியச் செய்தி போல் நினைந்து நின்ற 'ஒன்று' என்ன என்பதனை ஆய்தற்கு எடுத்துக்கொண்டு, உள்ளப்பிரிதலையும் அப்பிரிதல் தரும் உயிர் துயரத்தையும் நன்கு விளக்கி, "தலைவன் பிரியும் போது மீண்டும் இவரை எப்போது காண்போம்? என்று தலைவி நினைந்து கலங்கினாள் ; கசிந்துருகினாள்; ஓவியச் செய்தி போல் உணர்த்தப்பட்ட அந்த 'ஒன்று இதுவே ஆகும்" என்பதனான், 'ஒன்று' என்பதற்கு அவர் தந்த விளக்கமும் நயமும் உள்ளங் கொள்ளை கொள்வதாம்.

## முடிநிலை

இருபத்தெட்டு வரிகளைக் கொண்ட ஒற்றைப் பாடலைப் பல்லாற்றானும் ஆய்ந்த மு.வ. அவர்கள், வடபுலப் பயணத்திற்குத் தலைப்பட்ட தலைவனின் உள்ளத்து உணர்வுகளையும் மீண்டும் தலைவனை எப்போது காண்போம் என்று அந்த ஒன்றை நினைந்து உள்ளம் வருந்திய தலைவியின் உள்ளப் போராட்டத்தையும் புதுவது கிளக்கும் பான்மையிலான தம் அரிய விளக்கங்களால் நம் மனக்கண்முன் விரியச் செய்த மு.வ., ஒளிமிக்க ஒரு முழுமணியினைக் கலைத்துறையிலும் வாழ்க்கையிலும் இருளைப் போக்க வல்ல தூய ஒளிபடைத்த சிறந்த விளக்கம் அமைந்த இப்பாடலைப் பன்முறை போற்றிப் புகழ்ந்து, அவர் நல்கிய இலக்கிய இன்பப்பரிசே ஓவச்செய்தி என்பது வெள்ளிடைமலையாம்.

## முதன்மை சான்று மூலம்

1.ஓவச்செய்தி டாக்டர் மு.வரதராசனார் பாரி நிலையம்,சென்னை-8 (2008

# மதுரையில் மார்ச் இறுதியில் உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு

## தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தகவல்

**மதுரை, பிப். 28:** மதுரையில் வரும் மார்ச் இறுதியில் உலகத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு நடைபெற உள்ளது என்று தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் கூறினார்.

அயலகத் தமிழ்ப் படைப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பன்முக நோக்கில் 'அயலகத் தமிழ்ப் படைப்புகள்' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. இரு நாள்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கின் நிறைவு நாள் நிகழ்ச்சி மற்றும் சிறந்த அயலகப் படைப்புகளுக்கு பரிசு வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் க.பாண்டியராஜன் கலந்துகொண்டு பேசியது:

ஒரு மொழி அழியாமல் இருக்க வேண்டுமெனில் புதிய புதிய சொற்கள் கண்டறியப்படுவது அவசியம். அதற்கான பணிகளை தமிழ் வளர்ச்சித் துறை செய்து வருகிறது. உலகளவில் தமிழில் உள்ள 147 அகராதிகளை ஆய்வு செய்ததில், தமிழில் 4 லட்சத்து 12 ஆயிரம் சொற்கள் தனித்துவம் மிக்கவையாக இருக்கின்றன. மேலும், சொற்குவை திட்டத்தின் மூலம், இதுவரை 1000 புதிய சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதற்காக ரூ.10 கோடி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, டெக்சாஸ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், மலேசியா, செயின்ட் பீட்டர்ஸ் பர்க் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கின் நிறைவு விழாவில் சிறந்த அயலகத் தமிழ் படைப்பாளிகளுக்கான பரிசுகளை அ. இன்பா, மாத்தளை சோமு, நா. புருசோத்தமன், ஆசி. கந்தராஜா, க. இரா. மைதிலி சுந்தரம் (காலச்சுவடு பதிப்பகம்) ஆகியோருக்கு வழங்குகிறார் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க. பாண்டியராஜன். உடன் மாவட்ட ஆட்சியர் டி.ஜி. வினய், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) ப. அன்புச்செழியன்.

தமிழ்ப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையில் ஆண்டுதோறும் இளந்தமிழர் இலக்கியப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பை பெற்றிருக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக, அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ் மன்றங்கள் தொடங்குவதற்கான அறிவிப்பை தமிழக முதல்வர் விரைவில் வெளியிட உள்ளார்.

உலகளவில் இருக்கும் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து தமிழ் வளர்ச்சிக்கான பணிகளை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கில் உலக தமிழ்ச் சங்கங்களின் மாநாடு, மார்ச் இறுதியில் மதுரையில் நடைபெற உள்ளது. இதில் 25 நாடுகளில் இருந்தும் தமிழகம் மட்டுமின்றி 10 வெளி மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் பங்கேற்கின்றன என்றார்.

**பரிசுபெற்ற அயலகப் படைப்புகள்:** சிங்கப்பூர் கவிஞர் அ.இன்பா (மழைவாசம் - கவிதை நூல்), ஆஸ்திரேலிய எழுத்தாளர் ஆசி.கந்தராஜா (கள்ளக் கணக்கு - சிறுகதை), ஆஸ்திரேலிய எழுத்தாளர் மாத்தாளை சோமு (கண்டிச்சீமை -புதினம்), ஜெர்மனி தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் க.சுபாஷிணி (ஜெர்மன் தமிழியல்-ஆய்வு நூல்) ஆகியோருக்கு சிறந்த படைப்புகளுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறந்த பதிப்பகத்துக்கான பரிசை காலச்சுவடு பதிப்பகத்தின் க.இரா. மைதிலி சுந்தரம் பெற்றுக் கொண்டார்.

இதில், மதுரை மாவட்ட ஆட்சியர் டி.ஜி.வினய், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) ப.அன்புச்செழியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தொல்பொருள்கள் பராமரிப்புக்கு விரைவில் தனி அலுவலர்

மதுரையில் செய்தியாளர்களிடம் அமைச்சர் க.பாண்டியராஜன் கூறியது:

கீழடி உள்ளிட்ட 4 இடங்களில் அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன. இது தவிர தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொல்பொருள்கள் கண்டறியப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் முதல் 2 ஆயிரம் வரை பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இதுவரை சேகரிக்கப்பட்ட தொல்பொருள்களில் 10 சதவீதம் தான் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மற்றவை பாதுகாப்பு அறைகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் கிடைக்கும் தொல் பொருள்கள், புதையல்களாகக் கிடைக்கக் கூடிய அரிய பொருள்களைப் பராமரிப்பது அவற்றில் கூடுதல் ஆய்வுகளை மேற்கொள்வது போன்ற பணிகளுக்காக தனி அலுவலரை நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகம் உலகத் தரம் மிக்க அருங்காட்சியமாக உருவாக்கப்பட உள்ளது. அதேபோல, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் உள்ள அருங்காட்சியகங்களைத் தரம் உயர்த்த, உலகளவில் சிறந்த அருங்காட்சியகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய உள்ளோம் என்றார்.

தினமணி Sat, 29 February 2020
https://epaper.dinamani.com/c/49473350



# குறிஞ்சிநில இனக்குழு வாழ்க்கை முறை

**க.கருப்பசாமி**

முனைவர்பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

## முன்னுரை

பழந்தமிழ்ச் சமூகத்தில் சாதிப்பிரிவினையே இல்லை. நில அமைப்பையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் பாகுபாடு இருந்தது. இனக்குழு மக்கள் அவரவர் வாழும் திணை, நிலங்களுக்கேற்பப் பிரிக்கப்பட்டனர். அந்த வகையில் குறிஞ்சிநிலத்தில் வாழ்ந்த இனக்குழு மக்களின் வாழ்க்கையினை எடுத்தியம்பும் வகையில் இக்கட்டுரை முன்னெடுத்துச் செல்கிறது. குறிஞ்சி நிலம்,

**"புறணி துருக்கம் புறவம் வன்பால்**
**குறும்பொறை புறம்பணை குறிஞ்சி நிலப்பெயர்"**

என்று திவாகர நிகண்டு கூறுகிறது.

பூமியில் முதன் முதலில் குறிஞ்சி நிலம் தோன்றிய பின்னரே, மற்ற நிலங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பதை,

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு**
**முன்தோன்றிய மூத்தகுடி"** (பு.பொ.வெ.மா. நூ.14)

என்று ஐயனாரிதனார் கூறியது குறிப்பிடத்தக்கதாகும். குறிஞ்சி நிலமே மலையோடு தொடர்புடைய மனித வாழ்விற்குத் தகுந்த முதல் நிலம். குறிஞ்சி மலரின் சிறப்புக் கருதி குறிஞ்சி எனப் பெயர் பெற்றது. குறிஞ்சி நிலம் பற்றி வி.பா.கா. சுந்தரம் அவர்கள் குறிஞ்சி என்பதை பொருள் குறுகுதல், அணுகுதல், நெருங்குதல், சேர்தல், அடைதல் என்பது கருத்து. தலைவியை தலைவன் கண்டு முதலில் அணுகி நட்புறுதலே குறிஞ்சி என்ற ஒழுக்கப் பெயராயிற்று என்று கூறுகிறார்.

## குறிஞ்சிநிலக் கடவுள்

குறிஞ்சி நிலத்தெய்வம் முருகன். சங்க இலக்கியங்களில் முருகு என்ற சொல் முருகனைக் குறிக்கும். முருகன் என்ற சொல்,

**"அணங்குடை முருகன் கோட்டத்து"** (புறம்:299.6)

எனக் குறிக்கப்படுகிறது.

### குறிஞ்சிநில இனக்குழு மக்கள்

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களாகக் குறவர், குன்றவர், கானவர், வேட்டுவர், கொடிச்சியர், புனைவர் போன்றோர் உள்ளனர்.

> **"குறவர், கானவரே மள்ளர் குன்றவர் புனவ ரோடும்**
> **இறவுளர் குறிஞ்சி தன்னில் இன்புற மாக்கள் பேரே**
> **குறிஅறி குறத்தி மன்றைக் கொடிச்சிப்பெண் ணிறைவன் தானே**
> **திறன்மிகு மலையன் வெற்பன் சிலம்பன்கா னகநா டன்பேர்"**

என்று சூடாமணி நிகண்டு கூறுகிறது.

### இனக்குழு வாழ்க்கை

குறிஞ்சித் திணையானது மலையும் மலைசார்ந்த பகுதியானது. மலைப்பகுதியில் பிற திணைகளைப் போன்று நீரினைத் தேக்கிவைக்கும் பழக்கநிலை அங்கு இயற்கையில் அமையவில்லை. மழையை வானிலிருந்து கொண்டுவர அதனுடன் தொடர்புடைய நீர்சார்ந்த பொருட்கள் குறிஞ்சி நிலத்தில், குறவர்கள் இடிமுழக்கத்தினை இடிக்கும்போது வரும் சத்தமானது, மழையைக் கொண்டு வரும் அறிகுறியாக உள்ளது.

### குறிஞ்சிநில உணவு

குறிஞ்சிநில இனக்குழு மக்கள் மலை, காடுகளில் கிடைத்த உணவையே உண்டனர். தேன், கிழங்கு, பலா, மா, மூங்கில், அரி, கள், ஊன், தினை இவையே இன்றியமையாத தானியமாகும். இவர்களுடைய உணவு முறையானது, இயற்கை உணவு, வேட்டை உணவு, உற்பத்தி உணவு எனப் பகுக்கப்பட்டிருந்தது. குறவர் இனமக்கள் தங்களுடைய கடுமையான உழைப்பினால் தினையை உயர்ந்த பரணில் மேல் வைத்துப் பாதுகாப்பாக வைத்துக் காவல் புரிந்தனர். இந்நிலத்தவரின் முக்கியத் தொழில் வேட்டையாடுதல். இவ்வினக்குழு மக்கள் வேட்டைக்குச் செல்லும் போது தன்னுடன் நாயையும் அழைத்துச் சென்றுள்ளதை,

> **"செல்நா யன்ன கருவிற் சுற்றமொடு" (பெரும், 13:9)**

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும்,

> **"வெட்சிதானே குறிஞ்சியது புறனே"** (தொல்.புறத். 59:3)

என்னும் தொல்காப்பிய நூற்பா குறிஞ்சித் திணைக்குப் புறனாகிய ஆநிரை கவர்தலைக் குறிப்பிடுகிறது. குறிஞ்சிநில இனக்குழு மக்கள் தோரை நெல், வெண்சிறு கடுகு, ஐவனநெல், இஞ்சி, மஞ்சள், மிளகு, அவரை போன்றவற்றைப் பயிராக்குவதை,

> **"குறுங்கதிர்த்தோரை நெடுங்கால் ஐயவி**
> **ஐவன வெண்ணெலொடு அரில் கொள்புநீடி**
> **இஞ்சி மஞ்சள், பைங்கறி பிறவும்"** (ம.கா, 287-289)

என்று மதுரைக்காஞ்சி வரிகள் புலப்படுத்துகின்றன. மலைநாட்டில் கானவர் உழைப்பினால் எள், தினை, அவரை, வரகு மூங்கில் நெல், வெண்சிறுகடுகு, இஞ்சி,

மஞ்சள், வாழை, கூவைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, ஆசினிப்பலா, கரும்பு, ஐவனநெல், வெண்ணெல் முதலியவற்றையும் பயிராக்கி உண்டதை மலைபடுகடாம் (102-117) கூறுகிறது.

## குறிஞ்சிநில மக்களின் இருப்பிடம்

குறவர்களின் குடிலானது, மிகத் தாழ்வான சிறிய குடில்களைக் கட்டி, அதன்மேல் தினைத்தாளையும், ஐவன நெல்லின் தாளையும், புற்களையும் கூரையாக வேய்ந்துள்ளனர் என்பதை,

**"இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை**
**பிணையோர் நோக்கின் மனையோள் மடுப்பத்**
**தேம்பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து"** (குறிஞ்சி. 153-155)

என்று குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கை நிலையையும், அவர்கள் குடியிருந்த குடிலினையும் காணமுடிகிறது. மேலும் குறிஞ்சி நிலமானது மலையை ஒட்டிய பகுதியாக இருப்பதால் மலை, கல், பாறை காடு போன்றவற்றை ஒட்டி இருப்பிடம் அமைந்துள்ளது. இனக்குழு மக்கள் வாழும் நிலத்தின் அமைப்பு, குடிசையின் தன்மை, அவர்கள் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் சங்க இலக்கியப் பாடல்களில் உள்ளதை,

**"......................... கானவர்**
**வரைஓங்கு உயா: சீமை கேழல் உறங்கும்" (ஐங்.268: 2-3),**
**"கலகெழு சிறுகுடிக் கானவன்" (அகம்.7:22),**
**"கல் அகத்தது எம்ஊரே" (நற்.276:7),**
**"கல்கெழு குறவா" (நற்.353:5),**
**"காடு காத்து உறையும் கானவர் உளரே"** (மலைபடு.279)

என்ற வரிகளால் அறியமுடிகிறது. குறவர்களின் இருப்பிடம் குரம்பை என்று அழைக்கப்பட்டுள்ளதை முனைவர் ப.கோமளா அவர்கள் கூறுகிறார்.

## குறிஞ்சிநில மக்களின் விருந்தோம்பல்

சங்கக் காலத்தில் விருந்தோம்புதல் கலையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. கணவனுடன் இன்பமாக வாழும் மகளிர்க்குத் தனி உரிமையாகக் கருதப்பட்டது. பிரிந்த தலைவனையும் இணைத்து வைக்கும் ஆற்றல் வாய்ந்த வாயிலாக விருந்து குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியர் பன்னிரெண்டு வாயில்களுள் ஒன்றாக விருந்தையும் சுட்டுவர். விருந்து படைப்பதற்க்கு வேண்டிய இன்றியமையாத பண்புகளான அகமலர்ச்சி, முகமலர்ச்சி, இன்சொல் ஆகியன. விருந்தினர் அனிச்ச மலரைப் போன்ற மென்மையான தன்மையைக் கொண்டவர்கள் என்பதை வள்ளுவர்,

**"மோப்பக் குழையம் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து”** (குறள்-90)

என்ற குறட்பாவின் மூலம் விளக்குகிறார். குறிஞ்சி நில மக்கள் தினைச் சோற்றையும், நெய்யில் வேகவைத்த இறைச்சியையும் சமைத்துள்ளனர். இந்த உணவையே வந்த விருந்தினருக்கும் அளித்தனர் என்பதை,

**“பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்”** (மலை.பா.அ. 168-169)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மேலும், தமிழர்கள் வறுமை சூழ்ந்த காலத்திலும் தங்களுடைய வறுமையைப் பொருட்படுத்தாமல் வந்த விருந்தினரை விருந்தோம்பி மகிழ்ந்துள்ளனர். விருந்து படைக்கத் தன்னிடம் பொருள் இல்லாத நிலையில் தன் உடைமைகளைப் பிணையமாக வைத்து விருந்தோம்பல் செய்து இருப்பதை,

**“பொருநை வந்த விருந்தினற்கு மற்றுத்தன்**
**இரும்புடைய படிவாள் வைத்தனன், இதுகொண்டு**
**கருங் கோட்டுச் சீறியாழ் பணையம்”** (புறம்., 316)

என்ற புறநானூற்று பாடல் வரிகள் தமிழனின் விருந்தோம்பல் பண்பினை உலகறியச் செய்கிறது.

## குறிஞ்சிநில மக்களின் திருமண முறை

சமூகமானது நிலையான ஒழுங்குடன் நடைபெற திருமணமும் ஒரு காரணம். இத்திருமண முறையானது இன்றல்ல, நேற்றல்ல சங்ககாலத்திலேயே தோற்றம் பெற்றுவிட்டதை,

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தர் கரணம் என்ப”** (தொல்.1091)

என்னும் தொல்காப்பிய நூற்பா மூலம் மணமுறைகள் எண்வகைகளாகப் பிரித்துள்ளதைக் காணமுடிகிறது. குறிஞ்சி நிலத்தில் இனக்குழு மக்கள் பெற்றோருக்குத் தெரியாமல் தலைவன், தலைவி இருவர் மட்டும் தங்களுடைய நிலத் தெய்வமான முருகனை மனதில் எண்ணிக்கொண்டு வாழ்த்தி, அருவி நீரைக் குடித்துச் சூளுரைத்துக் கந்தருவ மணம் புரிந்தனர் என்பதை,

**“........................ பிறங்குநிலை**
**மீமிசைக் கடவுள் வாழத்திக் கைதொழுது**
**ஏமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி**
**.................................................**
**வானுரி உறையுள் வணங்கியோர்”** (குறிஞ்சி: 207 - 213)

என்னும் பாடலடிகளின் மூலம் காணமுடிகிறது. மேலும் வேங்கை மரத்தின்கீழ் மணம் பேசி முடித்ததை,

**“நன்றா கின்றால் தோழிநம் வள்ளையுள்**
**ஒன்றிநாம் பாட மன்றநின்று கேட்டருளி**
**.........................................**
**மணநயந்தனன் நம் மலைகிழ வோற்கே”** (கலி.41)

எனும் கலித்தொகைப் பாடல் வரிகளின் மூலம் தெரிந்து கொள்ளமுடிகிறது.

### குறிஞ்சிநில மக்களின் சடங்கு

மலைமீது வாழும் குறவர்கள் மழை இல்லாது, மழை வேண்டி இடிமுழக்கத்துடன் ஆரவாரம் செய்த காரணத்தினால் மழை பொழிந்தது என்பதை,

**“குன்றக் குறவ னார்ப்பி னெழிலி**
**நுண்ப லழிதுளி பொழியும் நாட”** (ஐங்.252: 1-2)

எனும் பாடலானது தெரிவிக்கிறது. இப்பாடலில் இயற்கையைத் தன்னுடைய வசமாக ஆக்கிக்கொண்டு தன்னுடைய தேவையை நிறைவுசெய்து கொள்ளும் குறவன் செய்த சடங்கு முறையானது, மழை பொழிய வேண்டும் என்பதற்காகவே செய்யப்பட்ட மந்திரச் சடங்காக அமைகிறது. இக்குறவனானவன் இனக்குழுத் தலைவனாகவும், மந்திரவாதியாகவும் இருக்கலாம் என்று கா.சுப்பிரமணியம் கூறுகிறார்.

குறிஞ்சிநில இனக்குழு மக்கள் குழு மனப்பான்மையை அடிப்படை மரபாகக் கொண்டு வாந்து வந்தவர்கள். உணவினைப் பகிர்ந்துண்ணும் முறை, கூட்டுண்ணும் முறை, வேட்டை, சடங்குமுறை போன்ற அனைத்துச் செயல்களிலும் குழுவின் பண்பும், அரவணைப்பும் நிறைந்துள்ளது. இத்தகைய இனக்குழுப் பங்களிப்போடு குறவர்கள் செய்த மதச்சடங்கு பற்றி,

**“மலை வான் கொள்க! என, உயிர் பலிதூஉய்**
**மாரி ஆன்று, மழைமேக்கு உயர்க எனக்**
**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல் கண் மாறிய உவகையர்”** (புறம்.143: 1-4)

என்னும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

### முடிவுரை

ஐவகை நிலங்களில் குறிஞ்சியே முதல் நிலமாகும். குறிஞ்சியில் வாழ்ந்த மக்களின் இனப்பெருக்கத்தினாலேயே மற்ற எல்லா நிலங்களிலும் மக்கள் வாழத் தொடங்கியிருக்க வேண்டும். அவ்வகையில் சங்க இலக்கியப் பாக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது குறவர் இனத்தவர்களின் இனக்குழு வாழ்க்கை, கடவுள், இருப்பிடம், உணவு, தொழில், விருந்தோம்பல், திருமணமுறை,

சடங்கு போன்றவற்றின் மூலம் இனக்குழுவாக வாழ்ந்த குறிஞ்சி நிலமக்களின் வாழ்க்கை முறையைக் கண்டறிந்து கொள்ளமுடிகிறது.


## முதன்மை நூல்

1) சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை (மூலமும் உரையும்), என்.சி.பி.எச் புக் ஹவுஸ், சென்னை-98. பதிப்பு-2017

## துணைநின்ற நூல்கள்

2) இராமசுப்பிரமணியம்,வ,த. புறப்பொருள் வெண்பாமாலை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. முதற்பதிப்பு பிப்ரவரி, 2009.
3) திவாகர நிகண்டு, முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 01. பதிப்பு - 2008.
4) சூடாமணி நிகண்டு, முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 01. பதிப்பு - 2008.
5) தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ஐந்தாம் பதிப்பு ஆகஸ்ட், 2017.
6) நமசிவாயம்,சே. தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதிப்பு. 2003.
7) கோமளா, பா. இனக்குழு மரபு - பாட்டும் தொகையும், முரண்களரி படைப்பகம், சென்னை. முதற்பதிப்பு மார்ச் - 2019.
8) நெடுஞ்செழியன்,இரா. திருக்குறள் தெளிவுரை, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை. ஐந்தாம் பதிப்பு-2011.
9) சுப்பிரமணியன், கா. சங்ககாலச் சமுதாயம், ப.16, என்.சி.பி.எச் புக் ஹவுஸ், சென்னை-98.



# ஜொகூர் தமிழ் இலக்கியக் கழகம்

சுரவி, செயலாளர்
ஜொகூர் தமிழ் இலக்கியக் கழகம்,
எண் 9, ஜாலான் ஜாயா 10, தாமான் ஜாயா,
81300 ஸ்கூடாய், ஜொகூர், மலேசியா.

1997ஆம் ஆண்டில் திரு. கே.எஸ்.அருணன் என்பவரால் ஜொகூர் மாநில வாசகர் வட்டம் என்ற பெயரில் தொடங்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட இவ்வியக்கம், மாதாந்திர இலக்கியக் கலந்துரையாடல், கருத்தரங்குகள், வட்டங்கள் எனும் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு எனப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. அப்போது கே.எஸ்.அருணன் அவர்கள் கழகத்தின் தலைவராகவும் தமிழ்மணி சி.வடிவேலு அவர்கள் துணைத்தலைவராகவும் திரு.வி.கே.முருகன் அவர்கள் செயலாளராகவும் திரு. கே.எஸ்.மணியம் அவர்கள் பொருளாளராகவும் சேவையாற்றினர்.

திரு. கே.எஸ்.அருணன் அவர்கள் காலமான பின்னர், தமிழ்மணி சி.வடிவேலு அவர்கள் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். கழகம் 'ஜொகூர் மாநிலத் தமிழ் இலக்கியக் கழகம்' என்று பெயர் மாற்றம் கண்டு பதிவு செய்யப்பட்டது. சில ஆண்டுகள் திரு. பாலமுருகன் அவர்கள் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். தற்போது திரு. வி.கே.முருகன் அவர்கள் துணைத்தலைவராகவும் சு.இரவிசந்திரன் செயலாளராகவும் திருமதி வே. இராஜேஸ்வரி அவர்கள் துணைச் செயலாளராகவும் திரு புண்ணியநாதன் அவர்கள் பொருளாளராகவும் பொறுப்பில் உள்ளனர்.

தமிழ்மணி சி.வடிவேலு அவர்களின் தலைமையில், நூல் வெளியீடுகள், இலக்கிய ஒன்றுகூடல்கள், தமிழ்மொழி விழாக்கள், இலக்கியக் கருத்தரங்குகள், தமிழ் மாநாடுகள், ஐம்பெரு புலவர்கள் இலக்கிய மாநாடு ஆகியவற்றுடன் சிங்கப்பூர் மலேசிய உறவுப்பால் மாநாடு, மியன்மர் தமிழர்களுடன் மாநாடு என அனைத்துலக மாநாடுகளையும் இலக்கியக் கழகம் சிறப்பாக நடத்தியுள்ளது.

ஜொகூர் தமிழ் இலக்கியக் கழகத்தின் தமிழ்ப்பணிகள் இத்துடன் நின்றுவிடாது தமிழ்நாட்டுத் தமிழர்களையும் வரவேற்று மாநிலம் எங்கும் தமிழ்மொழி - தமிழ் இலக்கிய மணம் பரவச் செய்து வருகின்றது. எங்கள் தமிழ்ப்பயணம் தொடரும்.

'தமிழன்னை தாள் பணிவோம் – அவள்
தழைத்திட பணி செய்வோம்'



# மானுடவியல் நோக்கில் நீராடல் குறித்த பண்பாட்டுப் பொருண்மை

(சங்க இலக்கியத்தை முன் வைத்து)

முனைவர் து.ராஜம்மாள்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோவை - 14.

மனிதனைப் பற்றியும் அவனது ஆக்கங்களைப் பற்றியும் நடத்தைகளைப் பற்றியும் ஆராயும் அறிவியல் துறையே மானிடவியல் ஆகும். மானிடவியல் தனிமனிதனின் நாகரிகத்தையோ, பண்பாட்டையோ மட்டும் எடுத்து அறிக்கை வடிவில் கொடுக்குமொரு அறிவியலன்று. பல நாகரிகங்களை, பல பண்பாடுகளை, பல சமூக அமைப்புகளைச் செவ்வனே கண்டு அதன்மூலம் சமூகம் எவ்வாறு தோன்றி வளர்ந்து மாறி வருகிறது என்பதையும், அம்மாற்றத்துக்குக் காரணமாக அமைந்தவற்றையும் ஆராய்வதாகும். அரிஸ்டாடில் முதன் முதலில் 'Anthropologist' என்னும் சொல்லைப் பயன்படுத்தினார். எவனொருவன் அவனைப் பற்றி உரையாடுகின்றானோ அவனே மானிடவியலாளர் என்கிறார். மானிடவியல் ஆய்வுகள் மானிடத் தோற்றம், உடலியல் தோற்றம், பண்பாட்டு வளர்ச்சி, இன வகைப்பாடு, சமுதாய முறைமைகள், மனித நம்பிக்கைகள், உற்பத்தி வடிவங்கள், பரிமாற்றம், நுகர்வு போன்ற ஆய்வுக் களங்களைக் கொண்டு ஆராயப்படுகிறது. மானிடவியல் பல வகைமைகளைக் கொண்டிருந்தாலும், சமுதாய மானிடவியல் (Social Anthropology), பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology) என்ற இருபெரும் பகுப்பே வளர்நிலை ஆய்வில் பரந்த பரப்பினை உடையதாக உள்ளது. அந்த வகையில் சங்க இலக்கியப் பனுவலிலுள்ள நீராடல் என்ற மரபார்ந்த பண்பாட்டுக் கூறினை மானிடவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமூகப் பண்பாட்டு மானிடவியல்

மானிடவியலின் ஒரு பிரிவான சமூகப் பண்பாட்டு மானிடவியல் இங்கிலாந்து நாட்டில் சமுதாய மானிடவியல் என்றும், அமெரிக்க நாட்டில் பண்பாட்டு மானிடவியல் என்றும் அழைக்கப்படுகின்றது. சமுதாய மானிடவியலானது மனிதச் சமுதாய நடத்தையினை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தின் கட்டமைப்பினையும், அதன் செயல் முறைகளையும் விளக்குகிறது. சமுதாய மானிடவியல் பழங்குடி மக்களின் குடும்பம், திருமணம், உறவுப் பொருளாதாரம், மதம், அரசியல், மரபு, சட்டம், சமுதாய நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி, வகைகள், செயல்முறைகள் போன்றவற்றை விளக்குவதாக அமைகின்றது. மார்கன் (Morgan), தைலர் (Tylor) போன்றோர் சமுதாய

மானிடவியல் அறிஞர்கள். இவர்கள் மனிதச் சமுதாய வாழ்க்கைமுறை, மாற்றங்கள், காலப் போக்கில் படிமலர்ச்சியின் காரணத்தால் ஏற்பட்டதாகத் தன் ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளனர். பண்பாட்டு மானுடவியல் பல்வேறு இனமக்களிடையே நிலவும் பண்பாடு அமைப்புகளையும், அவற்றின் செயல்முறைகளையும், இச்செயல்முறைகளால் ஏற்படும் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் மனிதனின் தோற்ற கால நடத்தைகள் முதல் இக்காலச் சமூக நடத்தைகள் வரை ஆராய்வதே பண்பாட்டு மானிடவியலின் நோக்கமாகும்.

விஸ்லர் என்பவர் "பண்பாட்டு மானிடவியல் ஒன்பது வகையான பொதுமைக் கூறுகளைக் கொண்டது. அவையாவன, 1. மொழி 2. உணவு, வீடு, போக்குவரத்துச் சாதனங்கள், கதைகள், உடை, கருவிகள், பொருட்கள், தொழில்கள். 3. கலை 4. மரபுக் கதைகள், அறிவியல் கருத்துகள் 5. சடங்குகள், மூடநம்பிக்கைகள் 6. குடும்பம், திருமணம், சமுதாயக் கட்டுப்பாடு, விளையாட்டுகள் பிற தொடர்புடைய சமுதாய நிறுவனங்கள் 7. சொத்து, பரிமாற்ற முறைகள், வணிகம் 8. அரசு, சட்டம் 9. போர் என்பன". இப்பொதுமைக் கூறுகளுக்கு அடிப்படையாக விளங்குவது 'நீர்' ஆதாரமாகும். நால்வகையான நிலத்திலும் நீர்நிலையின் தன்மைகளையும், 'நீராடல்' என்ற பண்பாட்டு கூற்றினைச் சமுதாயவியல் அணுகுமுறையோடு ஒப்பிட்டு ஆராயலாம்.

## ஐவகை நிலங்களில் நீராடல்

தொல்காப்பியர் நிலங்களை ஐவகையாகப் பகுத்துக் காட்டுகின்றார்.

**"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்தியப் பண்பே"** **(தொல்.948)**

என்ற நூற்பாவில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகளுள் பாலைத்திணை நீங்கலாக இவ்வுலகை நானிலமாகப் பகுக்கலாம். இவ்வாறு பகுக்கப்பட்ட ஒவ்வொரு நிலங்களுக்கும் முதல், கரு, உரிப்பொருள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார்.

**"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"** **(தொல்.964)**

என்ற நூற்பாவில் கருப்பொருள்களை வகைப்படுத்துகின்றார். தொல்காப்பியரின் கருப்பொருள் பகுப்பில் இடம்பெறுகின்ற நீரானது முதற்பொருளையும், உரிப்பொருளையும், இதர கருப்பொருட்களையும் தீர்மானிக்கும் தன்மையைக் கொண்டது. முதற்பொருளான நிலம் நீருக்கேற்ற வகையில் அமைவதையும், பக்குவப்படுவதையும் காணமுடிகின்றது. அவ்வாறு நீரால் பக்குவப்படும் நிலம் மக்களுக்கேற்ற வாழ்வியல் சூழலைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கின்றது. நிலத்திலுள்ள தாவரம், செடி, கொடிகள், விலங்கு, பறவைகள் போன்றன வாழ்வதற்கான தகவமைப்பிற்கு நீர் அடிப்படையானதொரு பங்கு வகிக்கின்றது. மனிதனின் வாழ்க்கை

நிலையிலும், தொழிலிலும் அடிநாதமாகத் திகழ்வது நீராகும். உலக நிலைபேற்றுக்கான அச்சாணி நீரென்பதைத் தொல்காப்பியரின் இலக்கணப் பனுவல்களின் பதிவுகள் வழியாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

மனித வாழ்நிலையில் இந்நீரானது முக்கியப் பங்கு வகிக்கின்றது. அவ்வகையில் 'நீராடல்' என்ற கருத்துப் பொருண்மை விளையாட்டு, சடங்கு, அரசியல் என்ற நிலையிலான பண்பாட்டு கூறாக விளங்குகின்றது. ஐவகை நிலத்தோடு தொடர்புடையதாக இந்நீராடல் நிகழ்வு விளங்குகின்றது. இந்நிகழ்வினை அந்தந்த நிலப்பிரிவின் இயல்புக்கேற்ற வகையிலே இலக்கியம் சித்தரிக்கிறது. வெவ்வேறு வகையான நிலப்பிரிவில் காணப்படும் நீராடல் செயல்பாட்டில் இருந்து மக்களின் பண்பாடு நிலத்திற்கு நிலம் வேறுபடுகின்றன. சங்கப் பாடல்களில் குறிஞ்சி முல்லை நிலங்களைக் காட்டிலும் மருதம், நெய்தல் திணைப் பாடல்களிலே மிகுதியாக 'நீராடல்' பேசப்படுகின்றது. பிற்காலத்திய இலக்கியங்களிலும் இப்பதிவினைக் காணமுடிகின்றது.

குறிஞ்சி, முல்லை நிலங்களில் முதற்பொருளுக்கு விளக்கமாக அந்நிலத்திலுள்ள நீர்நிலைகள் கருப்பொருளாகப் பேசப்படுகின்றது. சுனை > அருவி > பொய்கை போன்றன குறிஞ்சி நிலத்திற்கான நீர்நிலைகளாகும். இம்மூன்றும் மழைப்பொழிவு இல்லையென்றால் வறண்டுவிடும் தன்மை கொண்டது. எனவே இது நிலைத்த தன்மையுடையதன்று.

**"பரிமட மரையான் கருநரை நல்லூறு**
**தேம்பாய் மாமலர் நடுங்க வெய்து உயிர்த்து**
**ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும் நாடன்"** **(குறுந்.317:1-4)**

**"மணி நிறம் கொண்ட மாமலை வெற்பில்**
**துணி நீர் அருவி நம்மோடு ஆடல்"** **(ஐங்.224:2-3)**

**"கல்லறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்"** **(அகம்.79:4)**

என்ற பாடலடிகள் குறிஞ்சி நிலத்திற்கான நீர்நிலைகளைப் பேசினாலும், மழைப்பொழிவற்ற நிலையில் 'நீராடல்' நிகழ்விற்கான சான்றற்ற சூழலே நிகழ்கின்றது

கான்யாறு > ஊர் உண்கேணி > உவர்நீர் கூவல் > கயம் > குட்டம் போன்றன முல்லை நிலத்தின் நீர்நிலைகளாகும். இந்நீர்நிலைகளும் மழை நீரினை எதிர்பார்த்திருப்பதால் நிலையற்றதாகும். இங்கே நீராடல் குறித்த பதிவும் குறைந்த அளவே காணப்படுகின்றது.

“சூருடை நனந் தலைச் சுனை நீர் மல்க
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப
கல் அலைத்து இழிரும் கடு வரற் கான்யாற்று” (நற்.7:1-3)

“வறன் பொருந்து குன்றத்து உச்சிக் கவாஅன்
வேட்டச் சீறூர் அகன்கண் கேணிப்
பயநிரைக்கு எடுத்த மணிநீர்ப் பத்தர்
புண்தலை மடப்பிடி கன்றொடு ஆர
வில் கடிந்து ஊட்டின பெயரும்” (நற்.95:5-8)

“வன்புலம் துமியப் போகி கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்” (**அகம்**.79:5-6)

என்ற பாடலடிகள் முல்லை நிலத்தின் நீராதாரத்தையும் சிறப்பையும் கூறுபவையாக உள்ளன.

மருத நிலத்திலுள்ள நீர்வளத்தால் பயிர்த் தொழில் செழிக்கச் செல்வமும் சேர்கிறது. இச் செல்வச் செழிப்பே அவனுடைய ஒழுக்கத்திற்குக் காரணமாகிறது. இச் செல்வச் செழிப்பே தலைவனுடைய பரத்தையர் ஒழுக்கத்திற்கும், தலைவியினுடைய ஊடலுக்கும் அடிநாதமாகத் திகழ்கிறது. இலஞ்சி > பொய்கை > அகழி போன்றன நிலைத்த நீருடைய நீர்நிலைகளாக இருந்திருக்கின்றன.

**“மள்ளர் அன்னத் தடங்கோட்டு எருமை
மகளிர் அன்னத் துணையொடு வதியும்
நிழல் முதில் இலஞ்சிப் பழனத் ததுவே” (ஐங்.94:1-3)**

“ஆம்பல் அமன்ற தீம் பெரும் பழனத்துப்
பொய்கை ஊர்க்குப் போவோய் ஆகி” (**நற்**.200:6-7)

“பார் உடைத்த குண்டு அகழி
நீர் அழுவ நிவப்புக் குறித்து” (**புறம்**.14:5-6)

என்ற பாடலடிகள் மருத நிலத்தின் நீர் செழிப்பையும், வளமையையும் உணர்த்துகின்றது.

நெய்தல் நிலத்திலுள்ள நீர் சூழ்ந்த சில நகரங்களில் (புகார், முசிறி, தொண்டி) வணிகம் செழித்து மிகுதியாக இருப்பது நீர் அரசியலுடன் பிறநாட்டு வாணிபத்தோடு தொடர்புடையதாக இருப்பதற்கான பதிவுகள் பண்டைய இலக்கியங்களில் காணமுடிகின்றது. ஆகையால் நிலைத்த நாகரிகம், பண்பாடு போன்றன வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளன. நெய்தலில் நீராடல் பொருளாதார, அரசியல், சமுதாய வளர்ச்சி மிக்க சூழல்களில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீடுநீர் (நற்.58), முதுநீர் (குறுந்.399), தெண்நீர் (நற்.110), விரிநீர் (நற்.130), இருங்கழி (நற்.78,117), பெருங்கழி (நற்.111), பௌவம் (நற்.207), இருநீர் (குறுந்.334), முந்நீர் (புறம்.24,154) போன்றன நெய்தலிலுள்ள நீர்நிலைகளாகின்றன. இவற்றில் 'நீராடல்' நிகழ்வு சங்கக் காலத்தை அடுத்த சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

**"கனல்பெயல் பொழிந்தெனக் கானக் கல்யாற்று**
**முளிஇலை கழித்தன முகிழ் இணரொடு வரும்**
**விருந்தின் தீம்நீர் மருந்தும் ஆகும்" (நற்.53:6-8)**

**"தெண்நீர் மணிச் சுனை ஆடின்" (நற்.80:7)**

**"கயம் மூழ்கு மகளிர் கண் மாறும்" (குறுந்.9:6)**

ஐவகையான நிலங்களில் மருதம், நெய்தல் நிலங்கள் தவிரப் பிற நிலங்களில் நீர்வளம் குறைவு. எனவே நீராடல் குறித்த பதிவுகளும் குறைவு. ஆகையால் ஐவகை நிலங்களிலும் பழக்க வழக்கம், செல்வநிலை பண்பாட்டு செயல்களில் சமச்சீரற்றத் தன்மை காணப்படுகின்றது.

## நீராடலுக்கான நோக்கம் (Cheif motifs)

சமுதாய மானுடவியல் நோக்கில் நீராடல் செய்திகளைத் தொகுத்துப் பார்க்கும் போது அதன் தலைமைப் புனைவுக் கூறுகளாக மூன்று கருத்தாக்கங்களைக் கூறலாம்.

1. இன்பத்தின் விளைவு (விளையாட்டு)
2. அரசியல்
3. சடங்கியல் முறை

## இன்பத்தின் விளைவு

நீராடல் என்ற பண்பாட்டு பழக்கம் களவு, கற்பொழுக்கத்தோடு தொடர்பு உடையனவாக உள்ளன. சங்கக் காலத்தில் பின்னையதாகக் கருதப்படும் பரிபாடல் நீராடல் பற்றிய செய்தியை வழங்கும் தனி இலக்கியமாகின்றது.

வையையில் கடல் போல் நீர் பெருகி வந்த காட்சி சொல்லப்படுகிறது. வையையாறு நறுமணத்தோடு ஓடி வருகின்றது. அந்த நறுமணம் நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ ஆகிய நால்வகைப் பூக்களையும் சுமந்து வருவதால் ஏற்பட்டது. அதுவே வையை ஆற்றின் பொது நாற்றம் எனப் பரிபாடல் குறிப்பிடுகிறது. இது எப்படியிருக்கிறது என்றால் மரப்பொருள் பலவற்றைக் கலந்து உருவாக்கப்படும் மணக் கலவை நூல்களில் சொல்லப்பட்ட விதிமுறையின்படி கலக்கப்பட்ட மணத்தைப் போல வையை ஓடுகிறது. அதில் நீராடும் ஆடவரும் மகளிரும் மேலும் நறுமணப் பொருட்களைத் தமது உடலில் பூசிக்கொண்டு நீராடுவதால், எல்லாம் சேர்ந்து புதிய மணத்தைப் பரப்பியது என்று கூறப்படுகிறது.

"ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்
வேண்டு வழி நடந்து தாங்கு தடை பொருது
விதி ஆற்றான் ஆக்கிய மெய்க்கலவை போலப்
பொது நாற்றம் உள்உள் கரந்து, புதுநாற்றம்
செய்கின்றே, செம்பூம்புனல்" (பரி.7:17-22)

என்ற பாடலடிகள் வையை கரைக்கண் இருந்த சிறப்பான நீராடுதுறையான திருமருதமுன் துறையிலே மக்கள் புகுந்து சிறப்பாக நீராடும் காட்சிகளும் மிக விரிவாக விவரிக்கப்படுகின்றன.

வையையில் புதுவெள்ளம் வந்ததும் மக்கள் குதிரைகளிலும் யானைகளிலும், கோவேறு கழுதைகளிலும், பல்லக்குகளிலும் நடந்தும் நீராடச் செல்கின்றனர். புதுப்புனலாடச் செல்லும் மகளிர் எடுத்துவரும் பொருட்களும் தங்கள் ஆடவரை அணியச் செய்யும் ஆடை வகைகளும் கூறப்படுகின்றன. நீரில் விளையாடுவோரும் நம் தலைவரோடு ஊடல் கொள்ளும் தலைவியரும், முகைப்பருவத்து மகளிர் தாம் விரும்பும் காதலர் தம்மை வந்து சேருமாறு காத்திருத்தலும், காமவயப்பட்ட ஆடவரும் மகளிரும் ஊரார் பழி தூற்றுவர் என்றெண்ணி மறைந்து நிற்றலும் வாழைத் தண்டின் மேல்படுத்து விளையாடும் ஆடவரும், பந்து கவருவோரும், சிற்றில் விளையாடும் பெண்களிடம் சிறுசோற்றுக்கு கையேந்துதல் முதலானவையும் எடுத்துரைக்கப்படுகின்றன.

"நெய்ம்மாண் சிவிறியர் நீர்மணக் கோட்டினர்" (பரி.6:25)
"நெய்த்தோர் நிற அரக்கின் நீரெக்கி" (பரி.10:12)
"வண்ணநீர் கரந்த வட்டு விட்டு எறிவோரும்" (பரி.11)

என்ற பாடலடிகளில் நீர்விளையாட்டிற்கென்றே கருவிகளை அக்கால மக்கள் நீராடலுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். நெய்பூசப்பட்ட சிவிறி, வண்ணத் திரவம் நிரப்பி அல்லது குருதியைப் போன்ற அரக்கு நிறமுடைய நீரை அடைத்த நீரெக்கி, வாசனை நீர் அடைக்கப்பட்ட கொம்பு, மூங்கில் குழாய், வண்ணக் கலவைகளை நிரப்பி ஒருவர் மீது மற்றொருவர் வீசியெறியும் வட்டுகள் ஆகியன நீர்விளையாட்டுக்குரிய கருவிகளாகக் குறிக்கப்படுகின்றன. இது மக்களின் வாழ்வியல் உண்மைகளைப் புலப்படுத்துகின்றது. செல்வவளம், நாகரிகம், பண்பாடு போன்றவற்றால் வளர்ந்தோங்கிய மருத நிலத்திலும், நெய்தல் நிலத்திலும் நீராடலின் நோக்கமாக உலகியலில் கிடைக்கக்கூடிய இன்பமே மிகுதியாகத் தெரிகிறது.

"கிரேக்கர்கள் நீச்சல் தெரியாதவர்களைக் கல்வியறிவில்லாதவன் என்றே கருதினர். டேரியலின் ஆடம்பரமான குளத்தைக் கண்டு அலெக்சாந்தர் வியந்தாராம். உரோமானியர்கள் செயற்கைக் குளங்களை அமைத்து நீராடிய செய்தி தெரிய வருகிறது. மொஹஞ்சதரோ, ஹரப்பா நாகரிகத்திலும் செயற்கை நீராடுமிடங்கள் இருந்த

செய்தியை அறிகின்றோம். தூசியும் வெப்பமும் நிறைந்த கீழை நாடுகளில் குளிப்பது பெருந்தேவையற்றதாயிற்று" என்ற கருத்து நீராடல் என்ற பண்பாட்டுக் கூற்றோடு ஒப்பு நோக்கத்தக்கதாகின்றது. இயற்கை மட்டுமின்றிச் செயற்கையான நீரூற்றுகள் அமைத்து நீராடுகின்றன. நக்கீரர் நெடுநல்வாடையில் அரண்மனை குறித்து விளக்கும் போது செயற்கை நீரூற்று குறித்த செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

"கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய
கலிந்து வீழ் அருவி பாடுவிறந்து அயல" **(நெடுநல்.96-97)**

என்ற பாடலடி அரண்மனையின் முன்னே செயற்கை நீரூற்று இருந்ததற்கான பதிவுகளாக அமைகின்றது. இக்கருத்து தொன்மைக் காலத் தமிழ் மக்கள் இயற்கையோடு வாழும் வழிமுறையினை உடையவர்களாகவும், இம்மை வாழ்வில் உறுதிப் பாட்டுடையவர்களாகவும் உள்ளனர் என்ற பண்பாட்டு மானுடவியல் கருத்து பிறக்கிறது.

மானுடவியல் அறிஞரான மாலினோவ்ஸ்கி அணுகுமுறைகளுள் மூன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. மூலங்கள் கண்டுபிடிப்பு முறை (The Concept of Origins)
2. வளர்ச்சிப்படிகள் அணுகுமுறை (The Concept of Stages of evolutionism)
3. கலப்புகள் அணுகுமுறை (அ) ஒப்பியல் அணுகுமுறை (The Concept of diffusion or The Comparative Method)

ஐவகை நிலத்திலுள்ள நீராடல் முறையை இவ் அணுகுமுறைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 'வளர்ச்சிப்படிகள் அணுகுமுறை' ஓரளவிற்குப் பொருந்துவதாக உள்ளது. சங்கக் கிரேக்க ரோமானிய இலக்கியங்களில் நீராடல் பற்றிய ஒப்பீடு ஒப்பியல் அணுகுமுறையோடு தொடர்புடையாக இருக்கின்றது.

## அரசியல்

நீராடலில் அரசியல் தொடர்பும் நோக்கமும் இடம் பெற்றுள்ளது. அரசுருவாக்கத்திற்கு அடிப்படை நீர்நிலை. பதிற்றுப்பத்தில் சேரனின் புகழ்பாடும் போது அவனுடைய வானியாற்றையும், அவ்வாற்றில் நீராடும் மகளிரின் செல்வநிலையைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அம்மகளிரின் அணிகலன்கள் நீரில் மூழ்கிய பின்பும் தெரிகின்றன என்பர். அந்நீர் சந்தன மணம் குளிர்ச்சி பொருந்தியது என்கின்றார். இங்கே சேர மன்னனின் செல்வம், புகழ், கொடையைச் சிறப்பித்துச் சொல்வதற்கு அங்கே நீராடிய மகளிரின் நிலை உணர்த்திப் பின் இவைகளை உணர்த்துகின்றார்.

"மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கால்மயங்கு கதழ்உறை ஆலியொடு சிதறிக்
கரும்பு அமல் கழனிய நாடுவளம் பொழிய
வளம் கெழு சிறப்பின் உலகம் புரைஇச்"

என்ற பாடலடியில் நீர்வளத்தின் வாயிலாக மன்னனின் செல்வம் உணர்த்தப்படுகின்றது.

பெரும்பாணாற்றுப்படையில் மன்னனுடைய செல்வவளம் நீராடும் மகளிர் வாயிலாகக் குறிக்கப்படுகின்றது.

**"முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்**
**திரை தருமரபின் உரவோன் உம்பல்**
**மலர்தலை உலகத்து மன் உயிர் காக்கும்**
**முரசு முழங்கு தானை மூவருள்ளும்**
**இலங்கு நீர்ப் பரப்பின் வளை மீக்கூறும்**
**வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்**
**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்**
**பல்வேல் திரையின் படர்குவிர் ஆயின்" (பெரும்.பாண்30-37)**

இங்கே தொண்டைமான் இளந்திரையனின் சிறப்புக்கூற சோழ நாட்டின் நீர்வளத்தினையும், செல்வச் சிறப்பினையும் 'நீராடல்' என்ற தலைமைப் புனைவுக் கூறுகளுக்கு வலுசேர்க்கக்கூடிய கருத்தழகுகளாகப் பதிவு செய்துள்ளனர். பட்டினப்பாலையில் காவிரியின் நீர் வளத்தோடு நாட்டின் செல்வ வளமும் கரிகாற் பெருவளத்தானின் புகழும் படைக்கப்பட்டுள்ளது. பரிபாடலில் வையை பாண்டியனுடைய செல்வ நிலையின் தலைமைச் சிறப்பினை உணர்த்துகின்றது. புறநானூறு பாரியை "நீரினும் இனிய சாயல் பாரியென" பாராட்டுகின்றது. இக்கூற்றுகளில் ஆற்றங்கரைக்கும் அரசுருவாக்கத்திற்கும் அரசனின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், வளத்திற்குமான தொடர்பு உணர்த்தப்படுகின்றது.

## சடங்கியல்

சங்க இலக்கியத்தில் பெண்கள் சடங்கிற்காக 'நீராடல்' செய்த செய்தியினைப் பல பனுவல் வாயிலாக உணர்ந்து கொள்ளலாம். சடங்கு என்பது நிகழ்த்தப்படுவது. அழகியல் வெளிப்பாட்டுடனான புலப்பாட்டினை வெளிப்படுத்துவது. இதில் பரஸ்பர உறவுடைய இரண்டு கூறுகள் உண்டு. ஒன்று சடங்கென்பது ஒன்றைச் செய்து இன்னொன்றைப் பெறுவதற்காக நிகழ்த்தப்படுவதாகும். இது திடீரென்று புதிதாகக் கண்டுபிடித்துச் செய்யப்படுவதல்ல. மக்களிடம் காலங்காலமாக நிலைபெற்று அனைவராலும் அறியப்பட்ட வகையிலேயே அது நிகழ்த்தப்படுகிறது. அச்சடங்கு நிகழ்த்தப்படுவதற்கான காலம், இடம், விளைவு, பலன் அனைத்தும் அனைவரும் அறிந்ததே. ஒன்றைச் செய்து மற்றொன்றை அடைவது என்பதால் நிகழ்த்தப்படுதல் அடிப்படையாக அமைகிறது. அவையாவன,

1. **தைந்நீராடல்**
2. **வதுவை நீராடல்**
3. **புனிற்று நீராடல்**
4. **நடுகல் - நீர்படை**

**தைந்நீராடல்**

திருமணமாகாத பெண்கள் தம் தாயாரோடும், சுற்றத்தினரோடும் தைமாத நாளில் குளிர்ந்த நீரில் நீராடி, நீர்நிலைகளின் கரைகளில் குரவைக்கூத்து ஆடி, வண்டற்பாவை வழிபாடு செய்வர். இரண்டு நன்மைகளை வேண்டி இந்நீராடல் சடங்கினைச் செய்தனர். நாட்டில் மழைவளம் பெருக வேண்டும் தமக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டுமென்பதற்காகவேயாகும். அவை,

**"தைத் திங்கள் தண்கயம் படியும்**
**பெருந்தோள் குறுமகளல்லது**
**மருந்து பிறிதில்லை யான் உற்ற நோய்க்கே"** (**நற்**.80)
**"தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ"** (**கலி**.25)

என்ற பாடலடிகள் தைந்நீராடல் சடங்கியலானது நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது என்பது விளங்கும். இத்தைந்நீராடல் ஆதிரையானான சிவபெருமானோடு தொடர்புடையதாகப் பரிபாடல் பதிவு செய்கின்றது.

**வதுவை நீராடல்**

திருமண நாளில் மணமக்களை நீராட்டும் செய்தி சடங்கியலாகச் சித்தரிக்கப்படுகிறது. புதல்வரைப் பெற்ற மங்கல மகளிர் நால்வர் கூடி மணமக்களை வாழ்த்தி, மலரிதழ்களும் நெல்லும் கலந்த நீர் தெளிப்பர். இதுவொரு திருமணச் சடங்கு. மலர், நீர், நெல் ஆகியன மங்கலத்திற்கும், வளப்பத்திற்கும் உரிய சின்னங்கள். இல்லுறை தெய்வ வழிபாட்டில் நெல்லும் மலரும் தூவுதல் உண்டு.

வேதகால ஆரியர்களிடையேயும் திருமணச் சடங்குகளில் நெல்லும் நெய்யும் பயன்படுகிறது. சமயம் சார்ந்த அவர்களது திருமணத்திற்குப் புனிதநீர் தெளித்து மணமக்களை வாழ்த்துதல் சடங்கியலாக அமைகிறது. சங்க இலக்கியங்களில் வதுவை நீராடல் குறித்த பதிவுகளாக,

**"கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆக - என**
**நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி**
**பல் இருங் கதுப்பின் நெல்லொடு**
**வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்"** (**அகம்**.86:13-17)

**"படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ**
**வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்**
**பூக்கணும் இமையோர் நோக்குபு"** (**அகம்**.136:7-9)

என்ற பாடலடிகளில் திருமணத்தின் போது பெண்ணுக்குப் புனித நீராட்டல் என்ற சடங்கு முறையைக் குறிப்பிடுகின்றது. இச்சடங்கு முறை இன்றளவும் திருமணத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

"மொரோக்கோவில் திருமணத்துக்கு முன்னர் மணமகள் நீராடுவாள். ஏழுபெண்கள் ஏழுவாளி தண்ணீரை அவள் மீது ஊற்றுவர். கணவனுடன் சண்டையில்லாமல் வாழ வாழ்த்துவர்.

அபிசீனியாவில் புதுமணப் பெண்கள் கணவன் வீட்டினுள் நுழையும் போது அவள் மீது தண்ணீர் ஊற்றுவர். இங்குத் தண்ணீரொரு குறியீடு என்ற முறையில் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுகையில் இந்நீராடல் சடங்கு முறையாக அமைகிறது".

வேதகால ஆரியரிடையே இருந்தவொரு நீராடற் சடங்கினை இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். "ஓர் இளைஞன் ஒரு குருவின் கீழிருந்து ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் வேதம் முதலியன கற்பான். விரும்பினால் அவனுடைய சமயக் கல்வி தொடரலாம். சாதாரணமாக இருபது வயதில் அவ்விளைஞன் தன் வீட்டிற்குத் திரும்புவான். குடும்பத்துக்குரிய எல்லாப் பழக்கவழக்கங்களையும் மேற்கொள்வான். அப்போது அவன் சடங்கியலாக நீராடி, ஆசிரியருக்குத் தன் குடும்பத்தின் தகுதிக்கேற்ப அன்பளிப்பு தருவான். அத்துடன் அவனுடைய பிரமசரியம் முடிகிறது. விரைவில் திருமணம் செய்துகொள்ளும் உரிமையுடையவனாகிறான்" என்ற இம்மேற்கோள் நல்நிமித்தத்திற்கான குறியீட்டுத் தன்மையாக ஆரியர்களால் கடைபிடிக்கப் பட்டிருக்கின்றது.

### புனிற்று நீராடல்

புதல்வனைப் பெற்ற தாய் புனிற்று நீங்க நீராடுவது பற்றி நற்றிணையும், மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன. புதல்வனைப் பெற்றவொரு இளம் மனைவி வெண்கடுகை அப்பிய எண்ணெய் தேய்த்து நீராடிய பின்னர் அழகுடன் விளங்கினாள் என்ற பதிவு இடம் பெறுகின்றது.

நற்குடியில் பிறந்த மகளிர் ஒரு துன்பம் இல்லாமல் புதல்வரைப் பெற்றபின் கணவர் மகிழ, சுற்றத்தார் சூழக் குளத்து நீரில் நீராடுவர். அப்பொழுது அங்குள்ள முதற் சூலுண்ட பெண்கள் தாமும் இப்படியே எந்த விதமான துன்பமும் இல்லாமல் புதல்வரைப் பெறல் வேண்டும் என்று தெய்வத்தைத் தொழுவர். இந்த வழிபாட்டில் சாலினி என்ற தேவராட்டியும் கலந்து கொள்ளுவாள். பாற்போகனம் முதலியவை பலியிடப்படும். இந்தச் செய்தியை மதுரைக்காஞ்சி விளக்குகிறது.

**"நெடு நா ஒண்மணி கடி மனை இரட்ட**
**குரை இலை போகிய விரவு மணல் பரந்த**

பெரும்பாண் காவல் பூண்டு என ஒருசார்
திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறிஉற விரிந்த அறுவை மெல் அணை
புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈர்அணி
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கை
சீர்கெழு மடந்தை ஈர்இமை பொருந்த" **(நற்.40:1-9)**

என்ற பாடலடி புறத்தூய்மைக்காக நீராடுவதென்ற நோக்கத்தோடு சடங்கியலாகவும் இந்த நீராடல் அமைந்திருப்பதைக் காணலாம். குழந்தைப் பேறில்லாத தம்பதியர் மேல் மந்திர நீரை ஊற்றும் பிற செய்தியைச் சில இனக்குழுக்களுக்கு இடையே இன்றளவும் சடங்கியலாகப் பின்பற்றப்படுகின்றது.

## நடுகல் - நீர்ப்படை

போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு நினைவுச் சின்னமாக நடுகல் நட்டு வழிபட்ட பழந்தமிழர் அதற்காகத் தேர்ந்தெடுக்கும் கல்லை நீராட்டித் தூய்மை செய்வர். இந்த நடுகல் விழா பற்றிய செய்திகளை மானுடவியலாளரும் பண்பாட்டு சடங்கியலாகப் பேசுகின்றனர். இந்த நடுகல் - நீர்ப்படை ஆய்வில் மாலினோவ்ஸ்கியின் மூலங்கள் கண்டுபிடிப்பு அணுகுமுறை பயன்படலாம்.

"விடுவாய் செங்கனைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்" **(அகம்.179:7-8)**

நீரினால் பொருள்கள் தூய்மையடையும் என்பதையறிந்த பண்டையவோர் அதற்குப் பொருள்களைப் புனிதப்படுத்தும் ஆற்றலுமுண்டு என்று நம்பினர். வெறும் நிலம், நீரோடு சேர்ந்து பல்வகைப் பொருட்களை விளைவித்துத் தரும் ஆற்றலைப் பெற்று விடுகிறது என்பதை வியப்புடன் கண்ட பண்டைய மக்கள் நீருக்கு இதுபோலப் பலவிந்தையாற்றல்கள் உண்டு என்று நம்பினர்.

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின்
களிறு எறிந்து வீழ்ந்ததெனக் கல்லே பரவியல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" **(புறம்.335:9-12)**

புனிதத் தீர்த்தம், புண்ணிய நீராடல் என்று சில இடங்களைக் கருதி, அவ்விடத்து நீர் மலட்டுத் தன்மையைத் தீர்க்கும். பாவம் போக்கும், இறந்தோர் சாம்பலை அங்குக் கரைத்தால் ஆன்மா சுவர்க்கம் புகும் என்றெல்லாம் நம்பினார்கள். அதனால் நடுகற்களை நீராட்டினார்கள். இது வெறும் நீராடல் அன்று மந்திர நீராடல் சடங்காகும்.

"பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
மரல் வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலிசூட்டி பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்" **(புறம்.264:1-4)**

“இல்அடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி ஊட்டி” (புறம்.329:1-2)

“நடுகல் பீலிசூட்டி நார் அரி
சிறுகலத்து உருப்பவும் கொள்வான் கொல்லோ” (புறம்.232:3-4)

என்ற பாடலடிகள் நடுகற்களின் வழிபாட்டு முறையையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கின்றது.

“ஏ.எல். பாஷமும் ‘இந்தியா ஒரு விந்தை’ (the wonder that was India) என்ற நூலில் இது போன்றதொரு கருத்தை வெளியிடுகிறார். மொகஞ்சதாரோவிலுள்ள பெரிய குளங்களை இன்றைய இந்துக்களின் கோயில்களிலுள்ள குளங்களோடு ஒப்பிடுகின்றார். ஹரப்பா நாகரிகத்தில் நீராடல் வெறும் புறத்தூய்மைக்காகவன்றிச் சடங்கியலாகவும் அமைந்தது என்கின்றார்”. அந்த வகையில் நீராடல் சடங்கியலாகப் பண்பாட்டு மானிடவியலில் அமைகின்றது.

## முடிவுரை

மானிடவியல் நோக்கில் நீராடல் குறித்து ஆராய்ந்தால் நீராடலென்பது புறத்தூய்மைக்காகச் செய்யும் செயலன்றி இயற்கையோடு இயைந்த உலகியல் இன்பத்திற்காகவும் நீராடல் செய்துள்ளனர். சங்கக் காலச் சமுதாயத்தில் மக்கள் சமயச் சடங்குகளோடு வாழ்வது மட்டுமின்றி உலகியலான இயற்கை நெறிப்போக்கில் வாழ்ந்தனர் என்ற கருத்தே புலப்படுகின்றது.

## பார்வை நூல்கள்


1. சிவத்தம்பி, கா. திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள். ஆராய்ச்சி காலாண்டாய்விதழ். மக்கள் வெளியீடு. சென்னை.
2. துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு. (உ.ஆ.). புறநானூறு மூலமும் உரையும். திருநெல்வேலி தென்னிந்தியச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.1964.
3. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர். (உ.ஆ.). நற்றிணை நானூறு. திருநெல்வேலி தென்னிந்தியச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.1962.
4. பக்தவசல பாரதி. பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம். சிதம்பரம். 1999.
5. பெருமழைப்புலவர், பொ.வே. சோம சுந்தரனார். (உ.ஆ.). அகநானூறு. திருநெல்வேலி தென்னிந்தியச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.1973.
6. பெருமழைப்புலவர், பொ.வே. சோம சுந்தரனார். (உ.ஆ.). பத்துப்பாட்டு. திருநெல்வேலி தென்னிந்தியச் சைவச் சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.2008.
7. வானமாமலை, நா. நடுகற்களும் நம்பிக்கைகளும். ஆராய்ச்சி காலாண்டாய்விதழ். மக்கள் வெளியீடு. சென்னை.
8. வித்தியானந்தன், க. தமிழர் சால்பு. பாரி புத்தகப் பண்ணை. சென்னை. 1973

# ஆற்றுப்படை நூல்கள் காட்டும் தமிழரின் விருந்தோம்பல்


**மு.கயல்விழி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,**
**பச்சையப்பன் மகளிர் கல்லூரி,**
**காஞ்சிபுரம்-631502.**


## முன்னுரை

விருந்தோம்பல் என்பது தமிழருக்கே உரிய சிறந்த பண்பாகும். தன்னை நாடி வருவோரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தலே விருந்தோம்பலாகும். சங்கக் காலத்தில் மன்னரும், உயர் குடியினரும் தவிர சாமானியரும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். வாரி வழங்கும் வள்ளல்களை நாடிச் சென்ற புலவர்களும் பாணர்களும், விறலியரும், கூத்தரும், அவர்களிடம் பிச்சை கேட்டு நிற்காமல் தம் தனித்திறன்களைக் காட்டித் தம்முடைய அவல நிலையை அவர்களுக்குக் குறிப்பாக உணர்த்திப் பொருட்களைப் பரிசாகப் பெற்றுச் சென்றனர். அவ்வள்ளல்களும் வந்தாரை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து வேண்டுவனவை அளித்து அனுப்பி வைத்தனர். இவற்றால் சில உண்மைகள் அறியலாகின்றது. கலைஞர்களை ஆதரித்தல் தமது கடன் என்று மன்னர்களும் வள்ளல்களும் எண்ணிச் செயல்பட்டனர். அடுத்ததாக வறுமை என்பது எப்போதும் கலைஞர்களைப் பீடித்திருந்தது. மன்னர்களும், செல்வர்களும் அவர்களுக்குப் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினாலும் சிறிது காலம் கழித்து மீண்டும் அவர்களை வறுமை பீடித்தது. கலைஞர்கள் அறிவில் சிறந்தோராய் விளங்கினாலும் அவர்கள் வறுமையை வென்று வாழும் கலை அறிந்தாரில்லை. மன்னர்களும், பிரபுக்களும் நாடி வந்த கலைஞர்களுக்கு வாரி வழங்கினார்களே அன்றி அவர்களின் வறுமையை நிரந்தரமாக வென்று வாழும் வழியை உணர்த்தினாரில்லை. வேறு வகையில் சொல்வதென்றால் ஒருவரின் பசிப்பிணியைப் போக்குவதைவிட எதிர்காலத்தில் அப்பிணி அவர்களை அண்டாமல் வென்று வாழும் உபாயத்தைச் சொல்லித் தருதலே அறிவுடைமையாகும்.

சங்கக் காலப் புலவர் பெருமக்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய மன்னர்களைப் பற்றி புகழ்ந்து ஆற்றுப்படை நூல்கள் பல படைத்தனர். அவற்றின் மூலம் மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் கொடைத்தன்மையைப் பிறருக்கு உணர்த்தியதுடன் கலைஞர்களை எவ்வாறு வறுமை பீடித்தது என்றும் அவர்கள் அடைந்த அவலநிலையையும் எடுத்துரைத்தனர்.

சங்கக் கால அரசர்களான கரிகாலனைப் புகழ்ந்த பொருநராற்றுப்படையும், நல்லியக் கோடனைப் புகழ்ந்த சிறுபாணாற்றுப்படையும், தொண்டைமான் இளந்திரையனைப் புகழ்ந்த பெரும்பாணாற்றுப்படையும், நன்னனைப் பாராட்டிய கூத்தராற்றுப்படையும் (நக்கீரரின் திருமுருகாற்றுப் படை வேறு இயல்பினது) ஆற்றுப்படை நூல்களாகும். இவ்வாற்றுப்படை நூல்கள் தமிழர் வாழ்வியலைப் பதிவு செய்து விட்டுச் சென்ற சமூக ஆவணங்களாகும். இந்நூல்கள் மூலம் 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் மன்னர்களும், சாமான்ய மக்களும் எத்தகைய கொடை உள்ளத்துடன் விருந்தோம்பி வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது. ஆற்றுப்படை நூல்கள் தமிழரின் விருந்தோம்பல் என்ற உயரிய பண்பைப் பதிவுசெய்து விட்டுச் சென்ற கால ஆவணங்களாகும்.

## தமிழ் மன்னர்களின் விருந்தோம்பல் பண்பு

சங்கத் தமிழ் மன்னர்களின் தலைச் சிறந்தவன் கரிகாலன் ஆவான். சங்கக் காலச் சோழ அரசர்களில் சிறந்தவன் அவனே. அவன் சிறந்த கொடையாளியாகத் திகழ்ந்தான். பொருணராற்றுப் படையில் அவனது சிறந்த விருந்தோம்பல் பண்பு வெளிப்பட்டு நிற்கின்றது. பொருணன் ஒருவன் “தடாரி” என்ற இசைக் கருவியை இசைத்துக் கொண்டு கரிகாலனுடைய அரண்மனையை அடைந்தான். வறுமை அவனை வாட்டி வதைத்தது. எனவே பொருள் வேண்டி அவன் கரிகாலனை நாடிச் சென்றான். அங்குச் சென்று இசையை முழக்கித் தன் இசைத்திறனை வெளிப்படுத்தினான். இதனைக் கேட்ட கரிகாலன் விரைந்து வந்து அவனை உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்துப் பல உபசார மொழிகளைப் பேசி மகிழ்வித்தான். அவனை அன்புள்ளத்துடன் நோக்கினான். பின்பு அவன் அணிந்திருந்த கந்தலாடைகளை அகற்றி நுண்ணிய நூலால் செய்த ஆடையை அவனுக்கு அளித்து மகிழ்ந்தான். அவ்வமயம் அரசனுடைய ஏவல் மகளிர் அங்குத் தோன்றித் தங்கத் தட்டில் இருந்த மதுவைக் கோப்பைகளில் மதுவை ஊற்றி அவனுக்கு வழங்கினர். பொருணனும் களைப்பு நீங்க நன்கு உறங்கினான். அவனுக்குப் பணி செய்ய ஏவல் இளைஞன் ஒருவனும் நியமிக்கப் பட்டிருந்தான். நன்கு உறங்கிய பின் மறுநாள் காலை அவன் உணவுக் கூடம் அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு அவனுக்கு நன்கு கொழுத்த செம்மறியாட்டின் மேல் தொடையில் வெந்த இறைச்சியும், சுட்ட இறைச்சியும் “தின்னுங்கள்” “தின்னுங்கள்” என்று கரிகாலன் உடனிருந்து உண்ணச் செய்தான். இது தவிர வேறு பல தின்பண்டங்களையும் அவனுக்கு உண்பித்து மகிழ்ந்தான். அவன் உண்ண முடியாத அளவிற்குப் பலவிதக் கறிகள் அவனுக்கு விருந்தாகப் படைக்கப்பட்டன. இவ்வாறு பொருநன் நன்கு உண்டு மகிழ்ந்து அவ்விடத்து விருந்தோம்பலை வேண்டிய அளவு துய்த்து மகிழ்ந்தான். பல நாட்கள் கழித்துத் தன்னாடு செல்லவேண்டும் என்று அவன் வேண்டிய போது கரிகாலன் மிகவும்

மனம் வருந்தி "நீர் என் கூட்டத்தை விட்டுச் செல்கின்றனையோ?" என்று மனம் வருந்திக் கூறினான். வேறுவழியின்றி இறுதியாய்ப் பல களிற்றுடன் பிடிகளையும், ஆண் கன்றுகளையும் பரிசிலாக அளித்துத் தானே உடனிருந்து அவனை வழியனுப்பி வைத்தான். இவ்வாறு கரிகாலன் கலைஞர்களை உபசரித்துத் தன் விருந்தோம்பல் பண்பை வெளிப்படுத்தி நின்றான் (பொ.ஆ.படை:77-168).

ஓய்மானாட்டை நல்லியக்கோடன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் பெருவள்ளலாகத் திகழ்ந்தான். அவனுடைய தலைநகர் மாவிலங்கையாகும். இவனுடைய அரண்மனை புலவர்கட்கும், பொருணருக்கும், கூத்தருக்கும், பாணருக்கும் விறலியருக்கும், எப்போதும் திறந்திருக்கும். அவர்கள் தடையின்றி எப்பொழுது வேண்டுமானாலும் அவனைச் சந்தித்துத் தம் திறனைக் காட்டிப் பரிசில் பெறலாம். அவ்வாறு சிறிய யாழை இசைத்துச் சென்ற பாணன் ஒருவன் நல்லியக்கோடனது அரண்மனையை அடைந்தான். அவனை நல்லியக்கோடன் மகிழ்வுடன் வரவேற்றான். அவன் அணிந்த கந்தலாடையை நீக்கி மூங்கில் ஆடை பொன்ற மெல்லிய ஆடையை அளித்து மகிழ்ந்தான். தெளிந்த கள்ளினை அளித்து அவன் களைப்பை நீக்கிப் புத்துயிர் ஊட்டினான். வீமனுடைய மடை நூலில் உரைத்தபடி சுவையுடன் சமைக்கப்பட பலவித உணவுப் பொருட்களை பொற்கலங்களில் அளித்து மகிழ்ந்தான். சிறுபாணன் குடும்பத்தில் அனைவரும் விருந்துண்டு மகிழ்ந்தனர். தானே முன் நின்று அவர்களுக்குப் பலவித உணவளித்து உபசரித்தான். பின்பு அவர்களுக்குப் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினான். அவ்விடம் பாணன் பல நாள் தங்கிய பின்னர் குதிரைகள் பூட்டிய தேரில் பாணனை இருத்தி அவனை மகிழ்வுடன் வழியனுப்பி வைத்தான் (சிறு.பா: 235-261).

காஞ்சியை தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டவன் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். அவளை நாடி வரும் புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான். கடையெழு வள்ளல்களுக்குப் பின் இவனே பெருவள்ளலாகத் திகழ்ந்து விருந்தோம்பலில் தன்னிகரற்றுத் திகழ்ந்தான். அவனை வறுமையால் பீடித்த பாணன் ஒருவன் பரிசில் வேண்டி நாடிச் சென்றான். அவனை இன்முகத்துடன் வரவேற்ற இளந்திரையன் அவனது கந்தலாடையை நீக்கினான். பின்னர்ப் பாலாடை போன்ற நுண்ணிய ஆடையை அளித்து மகிழ்ந்தான். பின்பு தலைச் சிறந்த சமையல் கலைஞர்களைக் கொண்டு சமைக்கப்பட்ட செந்நெல்லும் இறைச்சியும் சேர்ந்த உணவைப் பலவிதப் பதார்த்தங்களுடன் தானே உடனிருந்து அவனுக்கு உண்பித்தான். பின்பு அவனை மகிழ்விக்க அவன் தலையில் பொற்றாமரையை அணியச் செய்து அழகு பார்த்தான். அவன் மனைவியான விறலியருக்கு பொன்னாலான பலவித மாலைகளை அணியச் செய்து மகிழ்வித்தான். பின்பு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில்

பலவிதப் பரிசில்களைத் தந்து பாணனை வழி அனுப்பி வைத்தான். இவ்வாறு நாடி வந்தவர்களை நன்முறையில் தன் விருந்தோம்பல் பண்பால் உடலும், உள்ளமும் குளிர்வித்து அனுப்பினான் இளந்திரையன் (பொ.ஆ.படை:467-493).

செங்கண்மாவை ஆண்டவன் நன்னன். இவன் மாபெரும் வீரனாவான். அதே சமயம் சிறந்த வள்ளலாகவும் திகழ்ந்தான். தான் போரில் வென்று கொணர்ந்த பெரும் செல்வங்களை எல்லாம் புலவர்களுக்கும், பாணர்களுக்கும், கூத்தர்களுக்கும், சூதருக்கும், மாகதர்க்கும் வாரி வழங்கிப் பெரும் கொடையாளி என்று பெயர் பெற்றான் (மலை:70-76). தன்னை நாடி வந்த புலவர்களை அவன் அன்புடன் எதிர்கொண்டு அழைப்பான். பின்பு அவர்களை உயரிய ஆசனங்களில் இருத்தி "நீங்கள் என் மீது உள்ள ஆசையால் இங்கு வந்தீர்கள் போலும்" என்று அன்புடன் உசாவுவான். அவர்களை அன்புள்ளம் கொண்டு நோக்கி அருட்பார்வை பார்ப்பான். நுட்பமாக நெய்யப்பட்ட பலவிதக் கலிங்கங்களை அவர்களுக்கு அளித்து அவர்களை இருக்கச் செய்வான். அவர்களைப் பல நாட்கள் தன்னுடன் இருக்கச் செய்து உபசரணைகள் பல புரிந்து மகிழ்விப்பான். அவர்களுக்குத் தேவையான அளவு உணவும், உடையும் அளித்து மகிழ்வான். கூத்தர் தலைவருக்குப் பொற்றாமரையைத் தலையில் சூடியும், விறலியருக்கு தோளணிகள் பல அணிவித்தும் மகிழ்விப்பான். தேர்கள், யானைகள், பசுக்கள், குதிரைகள், மற்றும் பெரும் செல்வமளித்து அவர்களை இன்முகத்துடன் அனுப்பி வைப்பான். இவ்வாறு நன்னன் தன்னை நாடி வரும் கலைஞர்களுக்குப் பலவிதமான உபசரணைகள் செய்து மகிழ்விப்பான் (மலை:545-575).

## சாமானியரின் விருந்தோம்பல் பதிவுகள்

சங்கக் காலத்தில் மன்னர்களேயன்றிச் சாமானியரும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். சிறுபாணாற்றுப் படை சாமான்ய மக்களின் பலவித விருந்தோம்பல் பண்புகளை எடுத்துரைக்கின்றது. எயிற்பட்டணத்தை அடையும் சிறுபாணர்களுக்கு அங்குள்ள நுளை மகள் காய்ச்சிய அரிய தேரலை அன்புடன் அளிப்பதுடன் குழல் மீன் சூட்டையும் உண்ண அளிப்பாள் (சிறு.பா:158-164). அத்துடன் முல்லை நிலத்தைச் சேர்ந்த வேலூர் சென்றால் அங்கு முல்லை நில மக்கள் விருந்தினரை அன்புடன் உபசரித்துப் புளியங்கறியிட்ட சோறும், ஆமானின் சூட்டிறைச்சியும் வேண்டிய அளவு தந்து உபசரிப்பர் (சிறு.பா:174-177). ஆவூர் நாட்டு மருத நில மக்கள் வந்த விருந்தினரை உபசரித்து அமலை வெண்சோற்றை நண்டின் கலவையுடன் அளித்துப் போற்றுவர் (சிறு.பா:194-195). பசியுடன் செல்லும் பெரும் பாணன் எயிற்றியர் வசிக்கும் பகுதி வழியே சென்றால் அவர்கள் இவனை அழைத்துத் தாம் சமைத்த புல் அரிசி சோற்றுடன் கருவாட்டையும் கலந்து தேக்கிலையில் வைத்து உண்விப்பர் (பெரு.பா:99-105). பாலை நிலத்து ஏயினர் வீடுகள் வழியாகச் செல்லும் பாணர்களுக்கு

ஈத்தின் விதை போன்று சிவந்த சோற்றை உடும்பின் பொறியலுடன் சமைத்து அளிப்பர். முல்லை நிலத்துக் கோவலர் குடியிருப்பை அடையும் கலைஞர்களுக்கு நண்டின் பார்ப்பைப் போன்ற தினை அரிசியால் செய்த சோற்றுடன் பாலையும் தந்து உபசரிப்பர் (பெரு.பா:167-168). அத்துடன் அவ்வூர்களில் வந்த விருந்தினர்களுக்குச் சிறிய பருக்கைகளாலான சோற்றையும், வேங்கை பூவை ஒத்த அவரை விதையின் பருப்பைப் போட்டுச் செய்த பருப்பு சோற்றை அளித்து மகிழ்வர் (பெரு.பா:195-196). மருத நிலத்தை அடையும் பாணருக்கு அந்நில மக்கள் செந்நிற நெல் சோற்றையும், கோழிக்கறியின் பொறியலுடன் சேர்த்து வழங்கிச் சிறப்பிப்பர் (பெரு.பா:255-256). அதே பகுதியில் உள்ள கரும்பு ஆலைகள் நோக்கிச் செல்லும் இவர்களுக்கு வேண்டிய அளவு கரும்புச் சாறும், கட்டிகளும் அம்மக்கள் கொடுத்து மகிழ்விப்பர் (பெரு.பா:261-262). நெய்தல் நிலத்தில் செல்லும் பாணர்களுக்குத் தவிடு நீக்கப்பெறாத சத்து நிறைந்த அரிசியைக் களியாகத் துழாவி, பெரிய பாத்திரத்தில் ஆற்றி, அவற்றுடன் நெல் முளையை இட்டு இடித்துச் சேர்த்து இரண்டு நாட்கள் அப்படியே இரவு பகலும் ஜாடியில் ஊறவைத்துப், பின்னர் வெந்நீர் ஊற்றி வேக வைத்து கைகளால் அலைத்துப் பிழிந்து பக்குவமாய்ச் செய்யப்பட்ட மதுவைப் பச்சை மீன் சூட்டுடன் அளித்து மகிழ்வர் (பெரு.பா:275-282).

மேலும் அங்குள்ள அந்தணர்கள் இல்லங்கள் வழியே சென்றால் நெல் சோற்றுடன் வெண்ணையில் வெந்த மிளகுப் பொடியும் கறிவேப்பிலையும் கலந்து வாட்டிய மாதுளையை ஜாடியில் நன்கு ஊற வைத்த மாவடுவுடன் கலந்தளிப்பர் (பெரு.பா:304-310). பட்டிணங்கள் வழியாகச் சென்றால் பெண் பன்றிகளுடன் புணர்ச்சியில் சேராமல் தனியே குழிகளில் வளர்க்கப்பட்டு நெல்லை இடித்து மாவாக்கி அதை உணவாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட ஆண் பன்றிகளைக் கொன்று சமைத்த கறி உணவைக் கள்ளுடன் சேர்த்துப் பாணருக்கு அவ்விடத்து மக்கள் அன்புடன் வழங்குவர் (பெரு.பா:242-245). இதை அடுத்துள்ள கடற்கரை தோப்புகளில் இனிய பலாப்பழமும் இளநீரும் வழைப் பழமும் பனையின் நுங்கும் வள்ளிக்கிழங்குடன் சேர்த்து வழங்குவர் (பெரு.பா:356-362).

குறிஞ்சி நிலத்தின் வழியாக நன்னனுடைய நாட்டிற்குச் செல்லும் பாணர்களுக்கு அந்நில மக்கள் தேனுடன் நெய்யில் பொறித்த பருத்த தசையையும் தினை அரிசிச் சோற்றுடன் வழங்கி உபசரிப்பர் (மலை.படு:153-157). அத்துடன் நில்லாமல் நீரால் அடித்துவரப்பட்ட பலாப்பழத்தின் கொட்டைகளை நன்கு அரைத்து மாவாக்கிப் புளியம் பழத்துடன் மோரையும் கலந்து அரிசியிலிட்டுச் சமைத்த உணவை அளித்து மகிழ்வர். அத்துடன் மலையில் கிடைக்கக்கூடிய அரிய பொருட்களான சந்தனம், அகில், பொன், மணி முதலியனவற்றையும் பரிசிலாகத் தந்து வழியனுப்புவர் (மலை.படு:175-185). மலைக் காடுகளில் உள்ள குடிசைகளை நோக்கிச் சென்றால் அங்குள்ள மக்கள் அவரை விதை,

மூங்கில் அரிசி, மேட்டு நில நெல் ஆகியவற்றைப் புளிக்கரைச்சலுடன் சேர்த்துச் சமைத்த புளியங் கூழை அளித்து மகிழ்வர். மேலும் வெண்மையான அரிசியை நெய்யுடன் சேர்த்துச் சமைத்த இறைச்சி உணவையும் அளித்து மகிழ்வர். மலைப் பகுதிகளில் சிறப்பாகக் கிடைக்கும் தேனையும், தினை மாவையும், வெல்லப் பொடியுடன் சுவைப்பட சேர்த்தளித்து மகிழ்வர் (நெடு.நல்:435-448). அதைக் கடந்து மருத நிலப் பகுதிக்குச் சென்றால் விரால் மீனின் தசைப்பகுதியை நன்கு சமைத்துக் கள்ளோடு சேர்த்து அம்மக்கள் வழங்கி உபசரிப்பர் (நெடு.நல்:451-464).

## தமிழரின் விருந்தோம்பல் நுட்பங்கள்

பண்டைய தமிழர்கள் விருந்தோம்பலில் பலவிதமான செம்மை சார்ந்த முறைகளைக் கடைபிடித்தனர். அவை முழுக்க முழுக்க உளவியல் நுட்பம் சார்ந்தவை. வறுமையுடன் தம்மை நாடிவரும் புலவர் கூத்தர், விறலியர், பாணர், பொருணர் போன்றோரை முதலில் இன்முகத்துடன் வரவேற்றனர். பின்பு அவர்களை அழைத்துச்சென்று உரிய இருக்கையில் அமரச்செய்து உபச்சார மொழிகள் பல கூறி அவர்களின் வேதனையைப் போக்கினர். “ஆள் பாதி, ஆடை பாதி” என்பது போன்று அவர்களின் கந்தலாடையை நீக்கிப் புத்தாடையை அணிவித்து அவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டினர். இனிய உபசரிப்பும், புதிய ஆடைகளும் அவர் தம் உள்ள களைப்பையும், உடல் தளர்ச்சியையும் உடனே போக்கின. பின்பு அவர்களின் வறுமையைப் பிறரிடமிருந்து வேறுபடுத்தித் தாழ்வுறக் காட்டும் தோற்றத்தை மாற்றிப் பிறரைப் போன்று அவர்களையும் உயர்வாக இருக்கச் செய்தனர். இதன் பின் அருந்த இனிய குடிநீரும், பசி நீங்க அறுசுவை உணவுகளும் அளித்துப் போற்றினர். தானே முன்னிருந்து உணவைப் பரிமாறி அவர்களை உண்பித்துத் தம் விருந்தோம்பலில் எவ்விதக் குறையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று செயல்பட்ட தமிழ் மன்னர்களின் உள்ளக்கிடங்கு இவற்றால் நன்கு வெளிப்பட்டது. நாடி வந்த கலைஞர்கள் அவர்கள் விரும்பும் நாள் வரை தங்கச் செய்து அவர்கள் பிரிய வேண்டுமென்று விரும்பிய பொழுது மட்டுமே திருப்பி அனுப்பப்பட்டனர். அவ்வாறு அவர்கள் பிரிய நேர்ந்த போதும் மன்னர்கள் மனம் வருந்தியது விருந்தோம்பல் பண்பின் உச்சகட்டமாகும். இவ்வாறு அவர்களை வழியனுப்பும்போது அவர்களைத் தேர்களில் இருத்திப் பரிசிலாக யானைகளையும், கன்றுகளையும், பொன்னையும், பொருளையும் அளித்து அனுப்பி வைத்தனர். இவ்வாறு விருந்தினரைச் சிறப்புடன் தமிழ் மன்னர்களும், வள்ளல்களும் சிறப்புடன் உபசரித்துத் தம் விருந்தோம்பல் பண்பை நிரூபித்துக் காட்டினர். துன்பத்துடனும், வறுமையுடனும் மனம் நொந்து வரும் கலைஞர்கள் திரும்பும்போது மன மகிழ்ச்சியுடன், உள்ள உற்சாகத்துடனும் திரும்பினர். தமிழ் மன்னர்கள் விருந்தினர்களைத் தானே நேரில் சென்று உபசரித்ததுடன் அவர்களுக்கு உயரிய ஆடைகளைத் தாமே அணிவித்தும், அவர்கள் பசிப்பிணியையும் நேரில் நின்று போக்கிய திறன் அவர்கள்

விருந்தோம்பலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் நல்கினார்கள் என்பதனைப் புலப்படுத்தும். நாடிவரும் விருந்தினர் உபசரிப்பில் எவ்விதக் குறைபாடும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அவர்கள் காட்டிய மிகுந்த அக்கறை போற்றுதலுக்குரியது. இன்று விருந்து மருந்தாவது போன்று அன்று ஆகிவிடக்கூடாது என்று அவர்கள் முனைப்புடன் செயல்பட்டனர். மன்னர்களுக்கு இணையாகச் சாமானியரும் நாடிவந்தோரை அன்புடன் விருந்தோம்பி மகிழ்ந்தனர்.

## முடிவுரை

ஒரு சமுதாயத்தை அறிவார்ந்த சமுதாயமாகக் கொள்ள வேண்டுமென்றால் அதன் மக்கள் அறிவில் சிறந்தவர்களாகவும், பண்பட்டவர்களாகவும், அதை ஆள்பவர்கள் திறமைசாலிகளாகவும், வல்லவர்களாகவும் திகழ வேண்டும். அத்துடன் ஆட்சியாளர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகவும் இருப்பது அவசியம். தமிழகத்தில் இது போன்றதொரு உன்னதச் சமுதாயமே சங்கக் காலத்தில் காணப்பட்டது. அக்கால மக்கள் நல்லவர்களாகவும், பண்பானவர்களாகவும், அரசர்கள் வல்லவர்களாகவும், கொடையாளிகளாகவும் திகழ்ந்தனர். செல்வ வளமும், பண நலனும் செழித்த அக்காலத்திலும் கலைஞர்கள் தம் வறுமையைப் போக்கிக்கொள்ள இயலவில்லை. அவர்தம் வாழ்வு நிலையற்றதாகவே இருந்தது. எனவே தன் வறுமையைப் போக்கிக்கொள்ள வள்ளல் தன்மை கொண்ட மன்னர்களை அவர்கள் நாடிச் சென்றனர். அம்மன்னர்களும் அவர்களை வரவேற்று உபசரித்துத் தம் விருந்தோம்பல் பண்பை வெளிப்படுத்தினர். அரசர்களுடைய அரண்மனைகள் நாடிவரும் புலவர்களுக்காக எப்போதும் திறந்திருப்பது போன்று அவர் தம் உள்ளங்களும் கலைஞர்களுக்காக எப்பொழுதும் திறந்தே இருந்தது. கலைஞர்களுக்கு வறுமை ஒரு சாபக்கேடாக மாறிவிட்டால் கலை வளராது என்பதை அவர்கள் நன்குணர்ந்து கலை வளர்ச்சிக்காகக் கலைஞர்களைப் புரந்தனர். ஆற்றுப்படை நூல்களைத் தவிர இன்னபிற சங்க இலக்கியங்களும் அக்கால வேந்தர்களின் கொடைப்பண்பையும், விருந்தோம்பலையும் காணலாம். ஆனால் ஆற்றுப்படை நூல்கள் மட்டுமே தமிழரின் விருந்தோம்பலை மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. மேலும் அந்நூல்கள் அக்கால மன்னர்களின் அன்புள்ளங்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. தவிர இந்நூல்கள் அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் நிலையையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. தமிழரின் புறவாழ்வில் வீரமும், கொடையும் இரு முதன்மையான பண்புகளாகும். அவையே வீடுபேற்றினை வழங்கும் என்ற தமிழரின் கோட்பாட்டிற்கிணங்கத் தமிழ் மன்னர்களும், வள்ளல்களும் வாழ்ந்து காட்டினர். அவர்களின் இவ்வுயரிய பண்பு நலன்களை எடுத்துக் காட்டும் சான்றாதாரமாக ஆற்றுப்படை நூல்கள் திகழ்ந்து வருகின்றன. வள்ளல் தன்மை கொண்ட சங்கக் காலப் பெருமக்கள் மறைந்து பலநூற்றாண்டுகள்

உருண்டோடிவிட்டன. அதன் பின் கோடிக்கணக்கானோர் தோன்றி வாழ்ந்தும் மறைந்தனர். ஆனால் கொடைத்தன்மையுடைய அவர்களின் பண்பு நலன்களை ஆற்றுப்படை நூல்கள் இன்றும் காலத்தை வென்று எடுத்தோதிக் கொண்டிருக்கின்றன.

## பார்வை நூற்பட்டியல்


1. பரிமணம். அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.( பதி),(2007), பெரும்பாணாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

2. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு. வெ.(பதி),(2007), பொருநராற்றுப்படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

3. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), திருமுருகாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

4. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), சிறுபாணாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

5. பரிமணம்.அ.மா. & பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி), (2007), மலைபடு கடாம், சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

6. தமிழ் நாட்டு வரலாறு-சங்கக் காலம், (1983), சென்னை: தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம்.

7. பிள்ளை.கே.கே. (2013), தமிழக வரலாறு மக்களும் பண்பாடு, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

8. Pillai.K.K.(1969), A Social History of The Tamils, Chennai: University of Madras.

9. Swaminathan.A,(1991),Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publication


**********************************

# புலனத்தில் தமிழ் இலக்கணப் பிழைகள் (ஒரு குமுகாயப் பார்வை)

இரவிசந்திரன் சுப்பிரமணியம், தமிழாசிரியர்

தாமான் யுனிவர்சிட்டி தேசிய இடைநிலைப்பள்ளி, ஸ்கூடாய், ஜோகூர், மலேசியா

சாரம்

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கு அதன் இலக்கணம் இன்றியமையாததாகும். தொன்மொழியாகவும் செம்மொழியாகவும் திகழும் தமிழ்மொழிக்கு இலக்கணம் மிகப் பெரிய அணிகளான விளங்குகின்றது. ஆனால், தமிழ்மொழியைச் சரியாகப் பேசவோ எழுதவோ பலரும் இன்று அக்கறை காட்டுவதில்லை. பேசினால் போதும் என்றும் எழுதினால் போதும் என்ற மனப்பான்மை கொண்டு மொழியைச் சீரழிக்கின்றனர். இவ்வாய்வு புலனப் பயன்பாட்டில் தமிழ்மொழியின் பயன்பாட்டில் சந்திப்பிழைகளின் தாக்கம் எந்தெந்த வகையில் சீர்கெட்டுள்ளன என்பதையும் மொழிப் பிழைகளையும் ஆராய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், தமிழ்மொழிக்குச் சந்தி இலக்கணம் எவ்வளவு முக்கியம் என்பதையும் இந்த ஆய்வின் முடிவு வலியுறுத்துகின்றது. இந்த ஆய்விற்காகப் புலனத்தில் பகிரப்படும் படச்செய்திகளிலுள்ள மொழிச் சிக்கல்களை அடையாளங்கண்டு விளக்கப்படுகின்றது.

## முன்னுரை

மொழி தொடர்புக் கருவியாக விளங்குகிறது. ஒருவருடைய எண்ணத்தை மற்றொருவர் அறிய மொழி உறவுப் பாலமாக அமைகிறது. எனவே, அதற்கொரு இலக்கணம் தேவை. இலக்கணம் இல்லையெனில், வாய்க்கு வந்தபடியெல்லாம் பேச நேரிடும். அப்படிப் பேசும்பொழுது கருத்துப் பிழையும் மொழிச் சிதைவும் ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்டே ஆய்வாளர் தமிழ்மொழியின் தற்காலப் பயன்பாட்டில் முக்கியக் கருவியாகத் திகழும் புலனத்தில் பிழை ஆய்வை மேற்கொள்ள முனைந்துள்ளார்.

### ஆய்வுப் பின்னணி

தமிழ்மொழியைப் பரப்பும் ஊடகமாக விளங்குவது புலனமாகும். இதிலிருந்துதான் பலரும் இன்று செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். பேரறிஞர்கள் முதல் தொடக்கப்பள்ளி மாணவர்கள் வரை இவ்வூடகத்தில்தான் மூழ்கியுள்ளனர். எனவே, இதில் தமிழ்மொழியின் பிழையற்ற பயன்பாடு எந்த அளவில் உள்ளது என்பதைக் கண்டறியும் முயற்சியே இவ்வாய்வாகும்.

### ஆய்வுச் சிக்கல்

தமிழ்ப்பள்ளிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்கள், பத்திரிகைத் துறைகளில் பணியாற்றுவோர், தமிழ் எழுத்தாளர்கள், வானொலி தொலைக்காட்சித் துறைகளில் பணிபுரிவோர், நீதி மன்றங்களில் பணியாற்றும் மொழிப் பெயர்ப்பாளர்கள் எனப் பலரும் முறையே தமிழ்மொழியில் கற்றல் திறனைக் கைவரப்பெற்றே பணியமர்த்தப்படுகின்றனர். ஆகையால், இவர்களிடையே நல்ல தமிழ்மொழியாற்றல் இருக்கும் என எதிர்பார்ப்பது இயற்கையே. ஆனால், நடைமுறையில் இது சாத்தியப்படுகின்றதா என்பதே கேள்வி. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், மேற்காணும் துறைகள் மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதேயன்றிக் கற்றுக் கெடுக்கும் கூடங்களல்ல. இளம் பயிர்களாகிய மாணவர்கள் சிறுவயதிலேயே தமிழ்மொழியைப் பிழையின்றிக் கற்றுவிட்டால் அவர்களுடைய எதிர்கால வாழ்வு சிறக்கும் என்பது முடிந்த முடிபு.

### ஆய்வு முறைமை

இவ்வாய்வு, ஆய்வாளரின் கைப்பேசிக்கு வரும் புலச் செய்திகளில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட புலனச் செய்திகளின் உள்ளடக்கங்களைப் புரட்டுங்கால் காணப்படும் தமிழ்மொழி பிழையின்றி அச்சீடு கண்டுள்ளதா என ஆராயப்பட்டது.

### ஆய்வு முடிவு

புலனத்தில் காணப்படும் சுவரொட்டிகள், பதாகைகள், அறிவிப்புப் பலகைகள் முதலியவற்றில் தமிழ்மொழி பெரும்பாலும் பிழையுடன் எழுதப்பட்டுள்ளன என்பது ***மனநெருடலுக்குரிய செய்தியாகும்***. தொடக்கப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி பிறகு உயர்கல்வி வரை தமிழ்மொழியைப் பிழையறக் கற்றவர்களும் மொழிப் பிழையைச் செய்கின்றனர் என்றால் அதில் தவறில்லை என்று துணிந்து கூறலாம்.

### குறை

- சொற்கள் சரியாகப் புணர்ந்து எழுதப்படவில்லை.
- தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.
- தமிழ்மொழியின் தரம் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

- பொதுமக்களின் நலன் கருதிச் சுவரொட்டிகள் பொறிக்கப்படவில்லை.
- தமிழர்களிடையே தமிழ்மொழி ஆற்றலும் பற்றும் குறைவாகவே உள்ளன.
- பிழைகளைக் கண்டறிந்து திருத்துவதில் யாரும் முனைப்புக் காட்டுவதில்லை.
- விற்பனை முகவர்களிடமிருந்து சுவரொட்டிகளை வாங்குவதால் அதிலுள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டத் தயங்குகின்றனர்.
- தமிழர்கள் தமிழறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் செலுத்துவதில்லை.
- பலரும் மெத்தனப் போக்கில் வாழ்கின்றனர்.

## பரிந்துரைகள்

- தமிழர்கள் தங்களது தமிழ்மொழி அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.
- தமிழ்மொழியில் பிழைகளை எங்குக் கண்டாலும் அதனைச் சுட்டிக்காட்டவேண்டும்.
- தமிழர்கள் தமிழ்மொழிப் பற்றை வளர்த்துக் கொள்ளவேண்டும்.
- ‘தமிழ் எங்கள் உயிர்’ என்னும் முழக்கத்தை உலகத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்க வேண்டும்.

## முடிவுரை

தமிழ்மொழி இன்று செம்மொழியாகத் திகழ்கின்றது. இருப்பினும், அதனைப் போற்றிக் கொண்டாடுவதில் நாம் தயக்கம் கொள்கிறோம். இந்நிலை முற்றிலும் மாறவேண்டும். அதற்குத் தமிழாசிரியர்களும் தமிழ் கற்றோரும் தமிழர்களும் தியாகம் செய்யவேண்டும். அப்பொழுதுதான், தமிழ்மொழி தழைத்தோங்கும். இதன்மூலம், தமிழ்மொழியின்பால் அனைவருடைய கவனம் திரும்பும். வாழ்க! தமிழ்மொழி!

## மாதிரிகள்







காலை வணக்கம் x அட்வான்ஸ் x நல்வாழ்த்துக்கள் x சனிக்கிழமை காலை வணக்கம் x வணக்கம் / முன், முதல் / நல்வாழ்த்து / வணக்கம் /










வாழ்க வளமுடன் x விட்டுக் கொடு x விட்டதைப் பிடிப்பாய் x வெற்றியைக் கடவுளிடம் x
வாழ்க வளத்துடன் / விட்டுக்கொடு / விட்டதைப் பிடிப்பாய் / வெற்றியைக் கடவுளிடம் /










வெற்றிகளைக் குவிக்கும் x பொது x சிறி x வனக்கம் x
வெற்றிகளைக் குவிக்கும் / போது / சிரி / வணக்கம் /

## மேற்கோள் நூல்கள்

1. சீனி நைனா முகம்மது செ. (2014). நல்லதமிழ் இலக்கணம். உங்கள் குரல். கோலாலம்பூர்.

2. 2.சீனி நைனா முகம்மது செ. (2014). புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள். உங்கள் குரல். கோலாலம்பூர்.
3. ஸ்ரீதரன் என்.(2010). தமிழ் எழுத்துக்கள் தரும் தகவல்கள். கங்கை புத்தக நிலையம். சென்னை.
4. சுப்பையா சொ. (2015). மொழிப்பாடம் கற்றல் கற்பித்தலில் தற்காலப் போக்குகள். ஸ்ரீ ராஜராஜன் கல்வியியல் கல்லூரி. காரைக்குடி
5. இரண்டாவது உலகத் தமிழ்க்கல்வி ஆராய்ச்சி மாநாடு. (2014). தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள். உப்சி, தஞ்சோங் மாலிம்.
6. புலனச் செய்திகள்.
7. ஐயா திருமாவளவன் அவர்களின் தமிழ் வேர்ச் சொல்லாராய்ச்சிப் பாடக்குறிப்புகள்.

*********************************************

# கனவில் கண்ட முகம்

முனைவர் முரளிதரன் கிருஷ்ணன்
சுவொன், கொரியா

கார் மேகமே குழலடி
கலைந்து போனதென் மனதடி
பிறை போன்ற நெற்றியடி
பித்து பிடிக்க வைத்ததடி
வளைந்து நெ ளிந்த புருவமடி
வலையை வீசி செல்லுதடி
கூர் அம்பு பார்வையடி
குத்தி சென்றது காணடி
இமைமூடி திறந்தாயாடி
இமை மூட வே மறந்தேனடி
நீண்ட நெடிய நாசியடி
சுவாசமாய் இருக்க வேணுமடி
கன்னத்தின் ஓரம் குழியடி
கவிழ்ந்தும் சிரித்தேன் நானடி

காதோரா கேசம் சுருட்டைமுடி
கவிதை கிருக்க சொன்னதடி
உதட்டின் மேலொரு மச்சமடி
ஒட்டி கொள்ள தூண்டுதடி
முத்தை வென்ற பற்களடி
முதல் தோல்வி முத்துக்கடி
செக்க சிவந்த இதழடி
சிந்தை கலங்க செய்யுதடி
சங்கை யொத்த கழுத்தடி
சங்கிலியாய் இருக்க தோணுதடி
கொஞ்சும் கிளிதான் மொழியடி
கொஞ்சம் கிறங்கி கொள்ளுதடி
மொத்த முகமும் மோகனமடி
மத்த முகமே வேணாமடி